ஸம்புடம் 11 }
ஸஞ்சிகை 9 }

ஸ்ரீ:

{ நந்தன ஹூ
{ புரட்டாசி மீ

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸ்ரீ அழகியசிங்கர் நியமனத்தால்
மாதந்தோறும் ப்ரசுரமாகும்
ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை

यस्याभवद्भक्तजनार्तिहन्तुः पितृत्वमन्येष्वविचार्य तूर्णम्।
स्तम्भेऽवतारस्तमनन्यलभ्यं लक्ष्मीनृसिंहं शरणं प्रपद्ये॥

ஸம்பாதகர்

P. S. ஸ்ரீநிவாஸதேசிகாசாரியர், M A., B. L. சிரோமணி.
(அட்வொகேட்)

தனிப்ரதி விலை 0—4—0

வர்ஷச்சந்தா }
ரூபாய் 3—0—0 }

{ SEPTEMBER 1952
{ VOL 11 NO 9.

விஷய ஸூசிகை

விஷயம் — பக்கம்

1. ஸாமரஸ்யாவகாஹநம் ... 199
[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M. A. B. L. அட்வோகேட், திருச்சி.]

2. ஆசார்யதேவோ பவ ... 202
[ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தானவித்வான், தேசிகதர்சனவிஜயத்வஜ, புத்தங்கோட்டகம், ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, ஸ்ரீரங்கம்.]

3. ராமக்ருஷ்ணன் ... 206
[ஸ்ரீ. உப. பாதூர் தூப்புல் ராமபத்ராசார்ய ஸ்வாமி, சிரோமணி, திருவள்ளூர்.]

4. பிறப்பு ... 209
[ஸ்ரீ. உப. நடாதூர், க்ருஷ்ணமாசார்யஸ்வாமி, திருவள்ளூர்.]

5. நந்தனோத்ஸவ நினைவுகள் ... 212
[ஸ்ரீ. உப. தி. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, அட்வோகேட், சென்னை.]

6. ஆழ்வார் ஆசார்யர்களின் அவதாரம் ... 214
[ஸ்ரீ. உப. பவுண்டரீகபுரம், நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, காஞ்சீபுரம்.]

7. ஸம்பாதகரின் குறிப்புகள் ... 217

8. முண்டகோபநிஷத்து ... 222
[ஸ்ரீ. உப. வேதாந்த வாவதூக, வித்வான், வில்லிவலம், நாராயணாசார்ய ஸ்வாமி, ந்யாயாத்யாபகர், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்.]

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 11 } நந்தன ௵ புரட்டாசி மீ { ஸஞ்சிகை 9

'𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌮𑍍 ।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌰𑍁𑌣𑍋𑌦𑍍𑌭𑌵𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥
𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸாமரஸ்யாவகாஹநம்

ஶப்தத்தை ஆவ்ருத்திசெய்தல், ஶப்த ஶக்தி த்வநி முதலியதால் அபேக்ஷிதமான பல ரஸப்பொருள்களைக்கூறி வ்யாக்யாநம் செய்யலாமென்பர். ‹ஸஜ்ஞீவ்ருக்ஷிதநாநா-டெஶ: ஸூத்ரகாராதிவிஹ்வலா। தத்ராத்ர வ்ருத்திநிஷ்டாத்ர்யா: க்ஷ்விதாஹ்வஏவ ந:॥ வளாஜெஷெயெஷு வாக்யேஷு ஶ்ருயொ-ஜநவிஶேஷத:। ஶ்ருக்ரதாநுகுணாநெ க்ஷிவக்ஷாஹாத்ரஶ்ரிதாவஸெயெ:॥’ என்று தத்வடீகை (10, 11). ‹க்ஷ்வித’ ச்லோகத்திற்கு 10-அர்த்தங்கள். அந்த ச்லோகத்தின் பதங்களால் 100-க்குமேற்பட்ட பின்வரும் ஶாஸ்த்ர ப்ரமேயங்கள் ஸங்க்ரஹிக்கப்பட்டதாக தத்வடீகை நிரூபித்தது. ‹சதுர்ப்ரூஹ: ஸஹஸ்ரஸு ந வயஸிஹவியா பாயிதம் கிஞ்சிதஹதா: நிவர்த்தஹஸ்தூவாராக க்ஷ்விதிஹ வடதெ ஶ்ரீகதாஶ்வயோம:’ என்று ஸாராவளீ. ‹முன்னீர்ஞாலம்படைத்த எம் முகில்வண்ணனே’ என்ற பாசுரத்தில் ‹முகில்வண்ணன் என்பதை விக்ரஹபரமாக்கி லோகதேசிகன் தத்வத்ரயத்தில் உரை செய்தவிடத்தில் ‹ஔதார்யகுணபரமென்று பலர் வ்யாக்யாநம் பண்ணினர்களேயாகிலும் விக்ரஹபரமாக இங்ஙனமும் ஓர் யோஜனை கொள்ளவேணும். ஒன்றுக்குப் பலயோஜனைகளிறே யிருப்பது’ என்று வரவரமுனி வ்யாக்யாநம். ரங்கராமாநுஜ ஸ்வாமியும் ந்யாயஸித்தாஞ்ஜநவ்யாக்யாநத்தில் (181) ‹ஶ்ரீமத்ராஜாரஸ்ய ஶ்ரீமத்ராஜா-நுஶிக்ஷகஸ்ய’ என்று ஸாதித்தார். மற்றொரு யோஜனையைக் கூறினல் முன்கூறப்பட்ட யோஜனையை தூஷிப்பதாகக்கொள்ளலாகாது.

இதை மனத்தில்கொண்டு ‹மனனகமலமற’ என்ற பாட்டிலும் ‘ஓடும்புள்ளேறி’ என்ற திருவாய்மொழியிலும் சில ரஸமான விஷயங்களை அனுபவிப்போமிங்கு.

‹மனனகமலமற’ என்ற பாசுரத்தில் ஆழ்வாருக்குத் தாம் ஸூசிக்கவேண்டிய பல விஷயங்களுண்டு. (1) ஈக்ஷத்யாநந்தமயாதிகரணங்களில் அசித் வைலக்ஷண்யமும் முக்தஜீவன் உள்பட சித் வைலக்ஷண்யமும் ப்ரதிபாதிக்கப்படுவதை ஜ்ஞாபிக்கவேணும். (2) ஆநந்தமயாதிகரணத்தில் ‹நேதரோऽநுபபத்தே:’ என்ற ஸூத்ரத்தில் காட்டியபடி முக்தாத்மாவைப் போன்ற சுத்தமும் யோகதசையில் ஸாக்ஷாத்கரிக்கப்படுமதான மலமற்ற ஜீவாத்மஸ்வரூபத்தைக் காட்டிலும் ப்ரஹ்மம் விலக்ஷணமென்பதையும் அறிவிக்கவேணும். ‹நேதி நேதி’ என்ற ச்ருதியின் ஒருபொருளாகிய ஸர்வ அசித் விலக்ஷணத்வத்தையும், ஸத்யமெனப்படும் ஆபேக்ஷிகஸத்யத்வதையுடைய ஜீவாத்மாக்களைக்காட்டிலும் பரமான நிரபேக்ஷஸத்யமும் ஸத்யஸ்யஸத்யமுமான ப்ரஹ்மத்திற்கு வைலக்ஷண்யத்தையும் விளக்கவேணும். (3) ‹ப்ரக்ருதைதாவத்வம் ஹி ப்ரதிஷேததி’ என்ற ஸூத்ரத்தில் காட்டியபடி ப்ரஹ்மத்தின் அபரிச்சேத்யத்வத்தையும் விளக்கவேணும். ‹அளவிலன்’ என்று இயத்தயா அபரிச்சேத்யத்வத்தையும் ஜ்ஞாபிக்கிறார். (4) அந்தராதித்யவித்யையும் அதிகரணமும் அடுத்தாப்போல் வருவதையும் ஆதித்யவாசியான ‹இனன்’ பதத்தால் ஸூசிக்கிறார். உபமாநார்த்தத்தையுமுடைய ‹இனன்’ என்பதால் ஸாத்ருச்யமற்றவன் உபமானமற்றவனென்றும் விளக்குகிறார். ‹ஈத்ருசாய ஸ்வாஹா’ என்று தொடங்கும் அரும்பதம் காட்டும் ச்ருதியையும் ‹ஈத்ருசன்’ என்பதற்கு ப்ரதிபதமான ‹இனன்’ பதத்தால் ஸூசிக்கிறார். (5) ‹எதிர்நிகழ்கழிவினும் இனனிலன்’ என்பதினாலும் ‹முக்காலத்திலும் ஒருபடியாலும் ஒப்பிலாதவன் என்பதை ஆழ்வார் வற்புறுத்துவது ஸ்பஷ்டம். ‹காலத்ரயத்திலும் ஒருபடியாலும் ஒப்பிலாதானாய்’ என்று திருவாறாயிரத்தில் இதன் பொருளுரை. இங்கே, ‹ஒருபடியாலும் ஒப்பிலாதானாய்’ என்றது வைதர்ம்யத்தாலும் த்ருஷ்டாந்தமில்லாதானாய் என்றபடி. ஒப்பு-

த்ருஷ்டாந்தம். ஸாத்ருச்யத்தாலே த்ருஷ்டாந்தமில்லை என்றார் கீழ். இங்கு வைதர்ம்யத்தாலும் த்ருஷ்டாந்தமில்லை என்கிறாரென்று கருத்து. 'பர்வதோக்நிமாந்' என்கிற விடத்தில் மஹாநஸம் ஸாதர்ம்யத்ருஷ்டாந்தம். மஹாஹ்ரதம் வைதர்ம்யத்ருஷ்டாந்தம். இப்படி ஈச்வரன் சேதநாசேதனங்கள் போலல்லன் என்கிறவிடத்தில் சேதநாசேதனங்கள் ஸாதர்ம்யத்ருஷ்டாந்தங்களல்லவென்றும் வைதர்ம்யத்ருஷ்டாந்தங்களேயென்றும் ஸித்திக்கும். இப்படி ஸித்திக்கும் வைதர்ம்ய த்ருஷ்டாந்தங்களை 'இனனிலன்' என்று இங்கே நிஷேதிக்கிறாரென்றபடி. இது அஸங்கதமன்றோவென்னில், 'ஈச்வரன் சேதநா சேதனங்கள்போலல்லன்' என்று முன் நிஷேதித்தவர் (ஆழ்வார்) இப்படி நாம் நிஷேதிக்கைக்கு ஸாத்ருச்யப்ரஸக்திலேசமுமில்லையென்று நிரூபித்து 'ஆக்ஷேப: ஸ்வயமுக்தஸ்ய ப்ரதிஷேதோ விசாரணாத்' என்கிற (ஆக்ஷேபாலங்காரக்) கணக்கிலே நிஷேதிக்கிறாராகையாலே ஸங்கதமென்று கருத்து என்று ஸாக்ஷாத்ஸ்வாமி—இருபத்திநாலாயிரம் - ஸ்ரீரங்கராமாநுஜஸ்வாமியின் ஸம்ஸ்க்ருத ஒன்பதினாயிரத்தில் ஸ்ரீபட்டர் ஸ்ரீஸூக்திகளாக ஈட்டில் ஸாதித்ததையே எடுத்து விஸ்தாரமாக அதை முற்றிலும் ஸமர்த்தனம் செய்துள்ள ஸம்ஸ்க்ருத ஸ்ரீஸூக்திகளையே தமிழ் செய்திருக்கிறார். 'ஒருபடியாலும் ஒப்பில்லாதவனாய்' என்ற திருவாறாயிரத்தின் பொருளேதான் 'வைதர்ம்யத்ருஷ்டாந்தமுமில்லையென்கிறார்' என்கிற பட்டர் ஸ்ரீஸூக்தியின்பொருள். திருவாறாயிரஉரையின் கருத்து ஸ்ரீபட்டர் ஸாதித்தது. 'அத்ர ஸ்ரீபட்டார்யை:' என்று தொடங்கி ஒன்பதினாயிரம் இதை விஸ்தாரமாய் விளக்கிற்று. 'இனன் ஸத்ருஶஸ்ய ந ஸாத்ருஶ்யமேவாஹ:, உசிதத்ருஷ்டாந்த-ஸ்வபாவப்ராயோபமாநஸம்பவேபி | ததா ச சேதனாசேதனவஸ்தூனாமாஹோஸ்வித் யஜ்ஞ-ஜ்ஞானவிஷயோ ந பவதீதி ப்ரதிபாதித-மேவ | சேதனாசேதனாப்யாம் வ்யாவ்ருத்த-த்ருஷ்டாந்தவசனம் ஸாத்ருஶ்யப்ரஸக்த்யபாவா-பிப்ராயேணாத்ர நிஷித்யதே | 'ஆக்ஷே-ப: ஸ்வயமுக்தஸ்ய ப்ரதிஷேதோ விசா-ரணாத் | சந்த்ர ஸந்தர்ஶயாத்மானமதவாஸ்தி ப்ரியாமுகம் ||' இத்யாக்ஷேபாலங்கார இவ' இத்யாதி. அநுமான அவயமான உபமான த்ருஷ்டாந்தத்தை ஸாக்ஷாத்ஸ்வாமி குறித்திருக்கிறார். 'மம ஸாதர்ம்யமாகதா:' என்று கீதையில் முக்தனுடைய சுத்தாத்மஸ்வரூபத்தை பகவானுக்கு ஸாதர்ம்யத்ருஷ்டாந்தமாகக் குறித்திருக்கிறது. இங்கே விசுத்தமனத்தினால் அறியப்படும் சுத்தஜீவாத்மஸ்வரூபம், பரிச்சேத்யம், பரமாத்மஸ்வரூபமோ அபரிச்சேத்யமென்று வைதர்ம்யம்விவக்ஷிதம். ஸாதர்ம்யவைதர்ம்யங்கள் வக்த்ருவிவக்ஷாதீநம். (6) 'ப்ரஹித: ப்ரதனாய மாதவானஹமாகாரயிதும் மஹீப்ருதா | ந பரேஷு மஹௌஜஸஶ்சலாதபகுர்வந்தி மலிம்லுசா இவ ||' என்று மாகம் 16-வது ஸர்க்கத்திலிருந்து ஈடு உதாஹரித்தது. சிசுபாலதூதன் ச்லோகம் வைதர்ம்யத்ருஷ்டாந்தமேயாகும். 'எங்களரசன் சிசுபாலனால் மாதவபக்ஷீயர்களை யுத்தத்திற்கழைப்பதற்காக நானிங்கே அனுப்பப்பட்டேன். திடீரென்று திருடர்களைப்போல் முன் தெரிவியாமல் ரஹஸ்யமாய் வந்து சத்ருக்களை எதிர்ப்பவரல்ல எம்மரசனைப்போன்ற மஹாவீரர்கள்' என்று அதற்குப்பொருள். மல்லிநாதனின் உரையுமப்படியே. (7) 'எதிர்நிகழ் கழிவினும் இனனிலன்' என்றதால் காலத்ரயத்திலும் ஒப்பாரேயில்லாதான் எனக் கூறுவதாலேயே கவிக்கு 'உபமானப்ரஸங்கமேயற்றவன்' என்று கூறும் கருத்து தெளிவாகிறது. (8) 'மனனகமலமறக்கழுவிய விசுத்தமனத்தால் க்ரஹிக்கக்கூடியது சுத்தஜீவாத்மஸ்வரூபம். பரமாத்மஸ்வரூபமும் 'மனஸா து விஶுத்தேன' என்று விசுத்தமனத்தால் க்ரஹிக்கக்கூடியவன் என்று உபநிஷத்துக்கள் பேசுவதுண்டு. ஆனால் அம்மனம் அபரிச்சேத்யமஹிமையுடையதாகத்தான் பரனை அறியும். விசுத்தமனோக்ராஹ்யம் என்று இரண்டிற்கும் ஒருவாறு ஸாதர்ம்யம் ஸம்பவிக்கநேர்ந்தாலும் ஜீவாத்மஸ்வரூபத்தைப்போல பரிச்சேதிக்கவொண்ணாததால் பரமாத்மஸ்வரூபத்திற்கு வ்யதிரேகம் எனும்

உத்கர்ஷம் உண்டென்று வ்யதிரேகாலங்கார மும் இங்கே கூடும். ‘ஸம்போவாதே ப்ரதீதேவா ஸாத்ருச்யே வஸ்துநோர்த்வயோ: | தத்ர யத்பேதகதநம் வ்யதிரேக: ஸ கத்யதே’ என்றுவ்யதிரேகாலங்காரத்தின் லக்ஷணம். சுத்தஜீவஸ்வரூபத்திற்கு ஜ்ஞாநாநந்தங்கள் ஸமமாயினும் அது பரமாத்மாயத்தம் ஸ்வாயத்தமல்ல என்ற ஏற்றம் பரமாத்மாவிற்கு உண்டு.

ஓடும்புள்ளேறி

இத் திருவாய்மொழியில் ஆர்ஜவகுணம் முக்யமாக ப்ரதிபாத்யம் என்பது திருவாறுயிரத்தில், ‘இப்படித் தம்மோடு கலந்தருளின வெம்பெருமானுடைய ஸர்வைச்வர்யம் சொல்லுகிறது’ என்ற முதல் வாக்யத்திலேயே ஸ்பஷ்டம். பரத்வேஸதி ஸௌலப்யம் சோபிப்பதுபோல ஸர்வைச்வர்யேஸதி தாழ்ந்தவரோடு மனமாரக் கூடிக்கலப்பதெனும் ஆர்ஜவகுணம் சோபிக்குமென்பது ப்ரஸித்தம். ‘தம்மோடு கலந்தருளின வெம்பெருமானுடைய’ என்பதை ஸர்வைச்வர்யத்திற்கு விசேஷணமாக வமைத்ததே இதைக்காட்டுகிறது. இத்திருவாய்மொழி நடுவான, ‘வைகலும் வெண்ணெய் கைகலந்து உண்டான் பொய்கலவாது என் மெய்கலந்தானே’ என்ற பாசுரத்தில் ‘பொய்கலவாது என் மெய்கலந்தானே’ என்பதை நெஞ்சில்கொண்டு பிள்ளான் தொடக்கத்திலேயே ‘தம்மோடு கலந்தருளினவெம் பெருமானுடைய’ என்று ஸாதித்தது. ‘பொய் கலவாது என் மெய்கலந்தானே’ என்பது தான் காணத்ரயஸாரூப்யம் என்னும் ஆர்ஜவ குணம். ‘மநஸ்யந்யத் வசஸ்யந்யத் கர்மண்யந்யத் துராத்மநாம்’ என்பது பொய் கலந்த அநார்ஜவகுணம். ‘பொய்யே கைம்மை செய்து புறமே புறமேயாடி’ என்பது அக்குணம். மநஸ்யேகம் வசஸ்யேகம் கர்மண்யேகம் மஹாத்மநாம்’ என்றபடி முக்கரணமும் ஏகரூபமாய் மனமார்ந்து மிகத்தாழ்ந்தவரோடும் கலந்தருளுவது ஆர்ஜவகுணம். ‘கரணத்ரய ஸாரூப்யம்’ என்று கீதாபாஷ்யம்

ஆர்ஜவகுணத்திற்கு இரண்டு ஸ்தலங்களில் ஸாதித்தபொருள். ‘வெண்ணெயளைந்த திருவுடம்போடேகூட வந்து தம்முடைய ஆந்ருசம்ஸ்யகுணரக்ஷணார்த்தமாக கார்யபுத்யா என்னோடு ஸம்ச்லேஷிக்கையன்றியே என்னோடு ஸம்ச்லேஷித்தல்லது தரிக்கமாட்டாத ஸ்வபாவனுய்க்கொண்டு என்னுடைய இந்த உடம்போடே ஸம்ச்லேஷித்தருளினனென்றார்’ என்று அங்கே திருவாறுயிரப்படி ஸ்ரீஸூக்தி. ‘கார்யபுத்யா’ என்பது,மேலுக்கு அஹ்ருதயமாக’ என்று காட்டும். அப்படியல்ல. ‘என் மெய்கலந்தானே’-என் மெய்யோடு என் பொய்நின்றஞானத்தோடும் அழுக்குடம்போடும் மெய்யாகவே (பொய் கலவாதேயே) கலந்தானே’ என்று ஆர்ஜவ குணத்தின் அத்புதப்ரகாசனம். என்னிடம் மெய்யென்பதே கிடையாது. என்னுடம்பிலும் மெய்யில்லை. ஆனல் அதற்கு ‘மெய்’ என்று விபரீதலக்ஷணையாகப் பெயர்மட்டுமே உள்ளது என்று ரஸம். ‘பொய்யே கைம்மை செய்து மெய்யே பெற்றொழிந்தேன்’ என்று ரஸம். இந்த நடு 5–ம் பாசுரத்தில் ‘பொய் கலவாது என் மெய்கலந்தானே’ என்றும், அதன் திருவாறுயிரம் வ்யாக்யாநத்தில் ‘கார்யபுத்யா............அன்றியே’ என்றும், 10–ம் பாசுரத் திருவாறுயிரப்படியில் ‘இவனுடைய விந்த நிருபதிகமானவாச்ரிதவ்யாமோஹத்தைப் பேசுமிடத்தில்’ என்றும் ஸூசிக்கப் பட்ட அர்த்தத்தை ‘நிரவதிதேஜஸாம் நிரவதௌ ஜகாத’ என்று ரத்னவளீ ஸூசித்து ஸங்க்ரஹித்தது. ‘ஸூரீணாம் ஸ்வைரஸேவ்ய’ என்ற உபக்ரமத்தையும், நிரவதிதேஜஸாம்.............ஜகாத’ என்ற உபஸம்ஹாரத்தையும் சேர்த்துப்படிப்பதால், ஸர்வைச்வர்யேஸதி ஆர்ஜவம் இத்திருவாய்மொழிக்கு ப்ரதிபாத்யமென்றுஸர்வபூர்வாசார்யர்களுடைய ஏககண்டமான கருத்து என்பது விளங்கும். ‘ஸூரி ஸேவ்யத்வாதிலிப்ஸுபிரபிஹிததாபி: க்ஷுத்ர உபமகே க்ருத்வநந்தஸாரதே’ என்று தொடக்கத்திலேயே நித்யஸூரிஸேவ்யத்வமான மஹைச்வர்யமும் ஆர்ஜவகுணப்ரதி

(இதன் தொடர்ச்சி 206–ம் பக்கம் பார்க்க)

ஸ்ரீ:

ஆசார்யதேவோ பவ

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

அர்த்த ஶப்தத்தால் அர்த்த ஜ்ஞாநம் விவக்ஷிதமாகிறது. ஆகையால் ‘ஸ்தாணுரயம் பாரஹார: கிலாபூதத்தீத்ய வேதம் ந விஜாநாதி யோ(அ)ர்த்தம் । யோ(அ)ர்த்தஜ்ஞ இத்ஸகலம் பத்ரமஶ்நுதே நாகமேதி ஜ்ஞாநவிதூதபாப்மா ॥’ [எல்லா வேதங்களையும் ஸம்பூர்ணமாக அத்யயநம்பண்ணி அதின் அர்த்தத்தை எவன் அறிந்துகொள்ளவில்லையோ அவன், மேலேயுள்ள பளுவைச்சுமக்கும் சுமைதாங்கிக்கல் போன்றவன். எவன் அர்த்தத்தை அறிகிறானோ அவன் பாபங்களிலிருந்துவிடுபட்டவனாய் நல்லதை அநுபவிக்கிறான்.] என்கிற ச்ருதியால் கேவல வேதாத்யயநம் நிந்திக்கப்படுகிறது. ‘ஶாஸ்த்ரார்த்தாந்’ என்கிற பஹுவசநத்தால் ஸகலஶாஸ்த்ரார்த்தஜ்ஞாநமும் ‘ஸாங்கோபாங்கம் ஸஹ வேதிதவ்யம்’ என்றபடி தெரிந்துகொள்ளவேண்டிய ஶாஸ்த்ரங்களின் பாஹுள்யமும் சொல்லப்பட்டதாகிறது.

அபிவ்யாப்த்யர்த்தகமான ‘ஆங்’ என்னும் உபஸர்க்கத்தால் அவ்வோ ஶாஸ்த்ரங்களில் சிற்சில பாகங்களில்மட்டும் அத்யயநம் பண்ணுவது என்பதில்லாமல் ஒவ்வொரு ஶாஸ்த்ரங்களையும் ஸம்பூர்ணமாக அத்யயநம் செய்யவேண்டுமென்று நிச்சிதமாகிறது.

‘ஆஸமந்தாச்சிநோதி’ என்கிறவர்த்தத்தால் ‘ஜ்ஞாநவ்ருத்தாஶ்ச யே ராஜந் பஹவ: பர்யுபாஸிதா:’ என்றபடி அநேக ஜ்ஞாநவ்ருத்தர்களை அணுகி விஷயங்களைத் தெரிந்துகொள்ளவேணும் என்பது விவக்ஷிதம். ஶ்ரத்ததாந: ஶுபாம் வித்யாமாததீதாவராதபி’ என்றபடி தனக்கு ஸாஜாதீயர்களிடத்திலோ, கீழ்ஜாதீயர்களிடத்திலோ, மேன்மை தாழ்மை பாராமல் ஜ்ஞாநம் ஸம்பாதிக்கவேண்டுமென்று ஏற்படுகிறது என்றுவது கொள்ளவேண்டும். ‘அந்த்யாதபி பரம் தர்மம்’ [கடைசிஜாதியனிடத்திலும் உயர்ந்த தர்மத்தை அறியலாம்.] என்று மநுவும் சொல்லியிருக்கிறார். ‘ஆஸேதுக’ என்பதால் தேசபஹுத்வம் விவக்ஷிதமாகில் அதிக ஜ்ஞாநத்தை ஸம்பாதிப்பதற்கு அநேக தேசங்களுக்கும் அநேக ஸபைகளுக்கும் போவதால் உண்டாகும் ச்ரமங்களைப் பொறுத்துக்கொண்டு ஜ்ஞாநத்தை ஸம்பாதிக்க வேண்டும் என்றும் ஏற்படுகிறது.

‘சிஞ்-சயநே’ என்று ஸமுதாயகரணவாசியான ‘சிஞ்’ தாதுவினால் அநேக தேச, அநேக மனுஷ்ய, அநேக காலங்களில் ஸம்பாதிக்கப்பட்ட அநேக ஶாஸ்த்ரஜ்ஞாந ப்ரதீதியால் ஆசார்யர்கள் 64 கலைகளையும் ஸம்பூர்ணமாக அறிந்தவராயிருக்கவேண்டும் என்று ஏற்படுகிறது.

‘ஶைஶவே(அ)ப்யஸ்தவித்யாநாம் யௌவநே விஷயைஷிணாம் । வார்த்தகே முநிவ்ருத்தீநாம்...॥’ என்கிறபடி வித்யையை பால்யத்தில் அப்யஸிக்கவேண்டியதாகையால், மிகவும் குறைந்தகாலமான பால்யத்தில் ஸகல ஶாஸ்த்ரங்களும் கற்றறிவது ஸாத்யப்படாததன்றோ? என்று ஸந்தேஹிக்கவேண்டாம். ‘ஜ்ஞாநாந்மோக்ஷோ விஜ்ஞேய:’ என்றபடி வேதாந்ததத்வஜ்ஞாநம் ஹேதுவாகையால் இந்த ஶாஸ்த்ரங்கள் அதற்கு மிகவும் உபகாரகமாகையால் ஸர்வகாலத்திலும் ஶாஸ்த்ரஜ்ஞாந ஸம்பாதனமானது ப்ரஹ்மாநந்தத்தையடைவதற்காகையாலே அதை எப்பொழுதும் பயிலலாம். இவ்விஷயம் ‘சிநோதி’ என்றவிடத்தில் வர்த்தமாநார்த்தவாசியான ‘லட்’ ப்ரத்யயமானது தெரிவிக்கிறது. ‘ஶைஶவே(அ)ப்யஸ்தவித்யாநாம்’ என்பது பால்யத்தில் வித்யையை அவச்யம்கற்கவேண்டும் என்று தெரிவிக்கிறதேயொழிய வேறு காலங்களில் வித்யாப்யாஸம் பண்ணக்கூடாது என்று நிஷேதிக்கவில்லை.

‘ஶாஸ்த்ரஜ்ஞாநம் பஹுக்லேஶம் புத்தேஶ்சலநகாரணம் । உபதேஶாத்தரிம் புத்த்வா

விரஜேதவபுகஜேபுவஸ॥' [ஶாஸ்த்ரஜ்ஞாநத்தை மிகவும் ச்ரமப்பட்டு அடையவேண்டும். அது மேன்மேலும் ஸம்சயத்தை உண்டு பண்ணக்கூடியது. ஆகையால் எல்லாவற்றையும்விட்டு ஆசார்யோபதேசத்தால் மோக்ஷத்தையடைந்துவிடலாம்.] என்றபடி மிகவும் ச்ரமப்பட்டு ஶாஸ்த்ரஜ்ஞாநஸம்பாதநத்தைவிட ஆசார்யோபதேசமே மோக்ஷத்தைத் தரக்கூடியதாகையால் எதற்காக ஶாஸ்த்ரஜ்ஞாநஸம்பாதநத்திற்காகச்ரமப்படவேண்டும்? என்கிற ஶங்கையை பரஸ்மைபதமான 'திப்' ப்ரத்யயமானது போக்கடிக்கிறது. அதாவது:- இந்த ஶாஸ்த்ரஜ்ஞாநமானது ஆசார்யனுக்கு ஸ்வப்ரயோஜநார்த்தமன்று. கேவலம் லோகோபகாரார்த்தம் செய்யப்படுகிறது என்று பொருள். 'ஶாஸ்த்ரஜ்ஞாநம் வஹுக்லேஶம்' என்பது ஜ்ஞாநோபதேசத்தால் பரோபகாரம் செய்யமுடியாத மந்தமதிகளின் விஷயம். ஆகையால் ஒரு விரோதமுமில்லை. ஆகையாலேயிறே 'ஸாயுஜ்யவாஸ்யாயிகஃ' என்கிற ஆநந்தவல்லியிலுள்ள உபநிஷத்வாக்யமானது ஜ்ஞாநோபதேசமூலமாக பரோபகாரம் செய்வதை ஸ்வயம்ப்ரயோஜனமான மநுஷ்யாநந்தமாகச் சொல்லுகிறது. ஆக, பரோபகாரத்திற்காக மிகவும் ச்ரமப்பட்டு ஶாஸ்த்ரங்களைக் கற்கவேண்டுமென்றால் 'ப்ரயோஜநமநுத்திஶ்ய ந மந்தோபி ப்ரவர்த்ததே' என்கிற ந்யாயப்படி ஆசார்யனுக்கு ஸ்வப்ரயோஜநம் ஒன்றுமில்லாததால் அவர்களுக்கு கேவல பரோபகாரார்த்தமான அதிக ஶாஸ்த்ராப்யாஸத்தில் ப்ரவ்ருத்தியானது எப்படியுண்டாகும்? என்று ஸந்தேஹிக்கலாம். இவர்கள் க்யாதிலாபபூஜாதிகளான ஐஹிக புருஷார்த்தத்தை உத்தேசித்தும், 'த்ரீண்யாஹுரதிதாநாநி காவஃ ப்ருத்வீ ஸரஸ்வதீ । அதிதாநாநி தாநாநாம் வித்யாதாநம் ததோதிகம் ॥' [தாநத்தில் கோதாநம், பூதாநம், வித்யாதாநம் என்னும் இவை மூன்று தாநங்கள் அதிதாநம் என்றும், அவைகளுக்குள் வித்யாதாநம் மிகவும் உயர்ந்தது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.] ஆகையால் வித்யாதாநமூலமாக பரலோகஸுகத்தையடைய வேண்டுமென்கிற இச்சையாலும் ஆசார்யர்களுக்கு அதிகஜ்ஞாநஸம்பாதநத்தில்ப்ரவ்ருத்தியுண்டாகிறது. இந்த லோகத்தில் சிலர் தன் வயிற்றை மாத்ரம் வளர்ப்பவர்களாய் அயலாருக்கு அந்நமிடாமல் தனக்கு வேண்டியதான அரிசி முதலியவைகளை ஸம்பாதித்துக்கொள்கிறார்கள். மற்றும் சிலர் விசால மனத்தை உடையவர்களாய் 'ந கஞ்சந வஸதௌ ப்ரத்யாசக்ஷீத । தத்வ்ரதம் । தஸ்மாத்யயா கயா ச விதயா பஹ்வந்நம் ப்ராப்நுயாத் ॥' [தன்னுடைய வீட்டிற்கு இரவு முதலிய வேளைகளில் புஜிப்பதற்காக வந்த ஒரு மனிதனை போஜநமில்லை என்று நிராகரணம் செய்யக்கூடாது. இது அவச்யம் செய்யவேண்டிய கார்யம். சாப்பிட வந்தவர்களுக்கு அந்நமிடாமல் திரும்பிப் போகச்சொல்லக்கூடாதாகையால், கௌணமான உபாயங்களாலாவது அதிகமான அந்நத்தை ஸம்பாதிக்கவேண்டும்.] என்கிற ச்ருதிவசநப்படி அந்நதாநத்தில் ச்ரத்தையுடையவர்கள், பணச்செலவையும், சரீரச்ரமத்தையும் முக்யமாக எண்ணாமல் வேறு தேசங்களுக்குச் சென்றாவது அரிசி முதலியவைகளை நிறைய ஸம்பாதித்து வைப்பதை நாம் கண்கூடாகப் பார்த்துவருகிறோம். அப்படிப்பட்ட உதாரர்களைப்போல் ஆசார்யர்களும் ரஹஸ்யத்ரயஸாரார்த்தங்களை அறிந்து அநுஷ்டிப்பதால் தன்னுடைய ஸம்ரக்ஷணம் உண்டாவதாலும், மிகவும் விசால மனத்தையுடையவர்களாய் இதரர்கள் அபேக்ஷிக்குமளவு எல்லா ஶாஸ்த்ரோபதேசங்களையும் செய்து, அதனால் அவன் உஜ்ஜீவிப்பதால் தனக்கு க்யாதிலாப பூஜாதிகளான ஐஹிக பலமும் வித்யாதாந மூலமான ஆமுஷ்மிக பலமும் உண்டாகிறபடியால் அதிக ஶாஸ்த்ரஜ்ஞாநஸம்பாதநத்தில் ஆசார்யர்கள் ப்ரயத்நப்படுகிறார்கள். ஆகையால் கீழ்ச்சொன்ன ஸந்தேஹங்களுக்கு இடமில்லை.

ஆசார்யர்கள் க்யாதிலாபபூஜாதிகளைக் கருதியும் உபதேசிக்கிறார்கள் என்றால் 'க்யாதிலாப நிஸ்ப்ருஹோ வதேத்' என்கிற விதியினால் சொல்லப்பட்ட ஆசையில்லாமல் சொல்லவேண்டுமென்பதோடு விரோதியாதோ?

'ய: க்யாதிலாபபூஜாஸு விமுக:' [க்யாதிலாபபூஜாதிகளில் ஆசையற்றிருந்தார்] என்கிற ஸ்ரீதேசிகனுடைய அநுஷ்டாநத்திற்கும், 'பரக்கும் பெரும்புகழ்' என்னும் ஸ்ரீஸூக்திக்கும் விரோதம்வாராதோ? என்றால்—'ஆசார்யாய நிஷ்க்ரயோ தத்யாத்' என்கிற வாக்யமானது தான் சிஷ்யர்களுக்கு உபதேசிப்பதற்கு ப்ரதிப்ரயோஜநமாக அவர்களிடமிருந்து பணத்தை வாங்கிக்கொள்ளக்கூடாது என்கிற அர்த்தத்தைச் சொல்லுகிறதே தவிர, அர்த்தலாபங்கள் சிஷ்யனுடைய ப்ரார்த்தனையினால் உண்டானால் அதை ஶாஸ்த்ரங்கள் நிஷேதிக்கவில்லை. ஆகையாலேயே ஶாஸ்த்ரங்கள் ப்ராஹ்மணனுக்கு அத்யாபநத்தை (வேதத்தைச் சொல்லிக்கொடுப்பதை) ஜீவிகையாகச் சொல்லியிருப்பது உபபந்நமாகிறது. 'ஆசா-ர்யாய ப்ரியம் தநமாஹ்ருத்ய' என்கிற ச்ருதியும் க்யாதிலாபபூஜாதிகளைக் கருதி உபதேசம் செய்வது கூடாது; ஆநுஷங்கிகமாக அவைகள் கிடைத்தால் தவறொன்றுமில்லை என்பதை தெளியவைக்கிறது. ஆகையாலேயே 'ய: க்யாதிலாபபூஜாஸு விமுக:' என்று சொல்லப்படுவதற்கும் விரோதமில்லை.

இதுநிற்க: பின்னும் ஸ்ரீபாகவதத்தில் பத்தாவது ஸ்கந்தத்தில் பகவான் கோபர்களைக் குறித்துச் சொல்லுகிறார்.—

'பஶ்யதைதாந் மஹாபாகாந் பரா-ர்த்தைகாந்தஜீவிதாந் | வாதவர்ஷாதப-ஹிமாந் ஸஹந்தோ வாரயந்தி ந: || அஹோ ஏஷாம் வரம் ஜந்ம ஸர்வப்ராண்யுபஜீவநம் | ஸுஜநஸ்யேவ யேஷாம் வை விமுகா யாந்தி நார்த்திந: || பத்ரபுஷ்பபலச்சாயா மூலவல்கலதாருபி: | கந்தநிர்யாஸபஸ்மாஸ்தி-தோக்மை: காமாந் விதந்வதே || ஏதாவஜ்ஜந்-ம ஸாபல்யம் தேஹிநாமிஹ தேஹிஷு || ப்ரா-ணைரர்த்தைர்தியா வாசா ச்ரேய ஆசர-ணம் ஸதா || [ஓ கோபர்களே! பிறர்களுடைய ப்ரயோஜநத்திற்காகவே ஜீவித்திருக்கின்ற புண்யஶாலிகளான இந்த மரங்களைப் பாருங்கள். பெரும் காற்று, மழை, க்ரூரமான வெய்யில், பனி இவைகளினால் உண்டாகிற கஷ்டங்களைத் தாங்கள் பொறுத்துக்கொண்டு, அம்மரத்தடிகளுக்குப் போகின்ற நமக்கு காற்று மழை இவைகளினால் உண்டாகும் கஷ்டங்கள் வாராதபடி செய்கின்றன. ஸர்வ ப்ராணிகளுக்கும் ஜீவனத்தைக் கொடுக்கிற இந்த மரஜந்மாவை மிகவும் உயர்ந்த ஜந்மா என்றே சொல்லவேண்டும். தார்மிகர்களான மனிதர்களை யாசிக்கிறவர்கள்போல, இம்மரங்களிடத்தில் உபகாரத்தை அபேக்ஷிக்கிற மனிதர்கள் பயன்களை அடையாமல் போகின்றதில்லை. என்ன ஆச்சர்யம்! இம்மரங்கள் தங்களிடமிருக்கிற இலைகளினாலும், புஷ்பங்களினாலும், பழங்களினாலும், நிழல்களினாலும், வேர்களினாலும், மரையுரிகளினாலும், கட்டைகளாலும், வாஸனைகளினாலும், பெருங்காயம் முதலிய பிசின்களாலும், கரிகளாலும், கொழுந்துகளாலும் எல்லா மனிதர்களையும் ஸந்தோஷிக்கச்செய்கின்றன. இந்த உலகத்தில் இப்படி பரோபகாரங்களைச் செய்கிற இம்மரங்களைக்காட்டிலும் உயர்ந்த ஜந்மாக்களாகச் சொல்லப்படுகிற மனிதர்கள், மற்றுமுள்ள ஸர்வ ப்ராணிகள் விஷயத்தில் தங்கள் உயிர்களாலும், 'க்ஷோணஜஸ்ருஷ்டாம் விப்ரேஷு ப்ராணேப்யோऽபி கரீயஸீம்' என்கிறபடியே உயிரைவிட உயர்ந்ததாக நினைக்கப்படுகிற பணங்களாலும், ஆத்மரக்ஷணத்தில் பர்யவஸிக்கிற தாநபுத்தியினாலும், தன்னுடைய தேஹச்ரமத்தைப் பாராமல் ஸர்வ ஜனங்களுக்கும் ஆத்மாநந்தோபகாரகங்களான உபதேசங்களாலும் பிறருக்கு ஸௌக்யத்தை உண்டுபண்ணுவது மனுஷ்யஜந்மம் எடுத்ததற்கு பயன்.] என்று மனுஷ்யனாகப் பிறந்ததற்கு ப்ராணன் முதலியவைகளால் பரோபகாரம் செய்வது முக்யமான ப்ரயோஜனமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வாக்யத்தில் பலம் சொல்லப்படாததால் இதற்கு நித்யவிதித்வம் ஸித்தம். அதாவது—இதில் சொல்லப்படுகிற பரோபகாரம் மனிதனாகப் பிறந்தவனால் அவச்யம் செய்யப்படவேண்டும். செய்யாமலிருக்கக்கூடாது என்று தாத்பர்யம். ஆகையினால் பரோபகாரதர்மமானது மனிதனாகப்பிறந்த எல்லோர்களாலும் செய்யப்படவேண்டியதாகிறது. ஆகையால் ஆசார்யனும் அதை அவச்யம் செய்யவேண்டும். பணம் முதலியவைகளை தாநம் செய்து

பண்ணும் உபகாரம் அநேகமாக சரீரபோஷணாதி விஷயத்தில் செய்யப்படுவதால் நச்வரமாகிறது. ஜ்ஞாநத்வாரா செய்யப்படும் உபகாரமானது ஆத்மாவிற்குச்செய்யப்படுவது. இடைவிடாமல் உபதேசம் செய்துவந்தாலும் குறையாது. 'ஸர்வேஷாமேவ தாநாநாம் ப்ரஹ்மதாநம் விஶிஷ்யதே' என்று மனுவினால் சொல்லபபடுவதாலும் ஆசார்யர்களால்செய்யப்படும் ஜ்ஞாநோபதேசமான பரோபகாரம் எல்லாவற்றையும்விட மிகவும்உயர்ந்ததாகிறது. ஆகையால் இவ்வுபகாரத்தைச் செய்ய ஆசார்யர்களுக்கு அதிகஜ்ஞாநஸம்பாதநத்தில் ப்ரவ்ருத்தி உண்டாகிறது.

அதவா—'ஶிவாய லோகஸ்ய பவாய பூதயே ய உத்தமஶ்லோகபராயணா ஜநா: ஜீவந்தி நாத்மார்த்தம்' என்று ஸ்ரீபாகவதத்தில் சொல்லியபடி [பகவத்பரர்களான பெரியோர்கள் உலகத்தை உஜ்ஜீவிப்பதற்காகவே தாங்கள் ஜீவித்திருக்கிறபடியால் தங்களுடைய ப்ரயோஜநத்தை கணிசிப்பதில்லை.] என்றும், 'ஜநஸ்ய க்ருஷ்ணாத் விமுகஸ்ய தைவாத் அதர்மஶீலஸ்ய ஸுது:கிதஸ்ய। அநுக்ரஹாயேஹ சரந்தி நூநம் பூதாநி பவ்யாநி ஜநார்தநஸ்ய ||' [க்ருஷ்ணனிடத்தில் பக்தியில்லாமல் இருக்கிறவர்களாயும், ஆசையாலேயே அதர்மத்தையேசெய்து அதனால் நரகாதிதுக்கங்களை அநுபவிக்கிறவர்களாயும் இருக்கிற ஜனங்களுடைய அநுக்ரஹத்திற்காக ஸஞ்சரிக்கின்றார்கள்.] என்பதால் இதரர்களுக்கு உபகாரம்செய்வதே தனக்கு மேன்மை என்று எண்ணுகிறவர்களுக்கு வேறு ப்ரயோஜனத்தில் அபேக்ஷை உண்டாகாது. இதனால் ஆசார்யனுக்கு அதிக ஶாஸ்த்ரார்த்தஜ்ஞாநஸம்பாதநம் லோகோபகாரகமாய் இருப்பதால் பரோபகாரநிரதத்வம் சொல்லப்பட்டதாகிறது.

'ஆசிநோதி ச' என்கிற இடத்தில் இருக்கிற 'ச'காரமானது 'க்ரஹணம் தாரணம் சைவ ஸ்மரணம் ப்ரதிபாதநம் । ஊஹோ(அ)போஹோ(அ)ர்த்தவிஜ்ஞாநம் தத்த்வஜ்ஞாநஞ்ச தீகுணா:' என்று சொல்லியிருக்கிறபடி உபதேசத்திற்கு வேண்டிய குணவிசேஷங்களைச் சொல்லுகிறது. இல்லாவிட்டால் 'ஶீலவ்ருத்தபலம் ஶ்ருதம்' என்றபடி ஶாஸ்த்ரஜ்ஞாநங்களைப் பயிலுவதால் உண்டாகும் குணவிசேஷங்களாவது சொல்லப்படுகின்றன.

ஆசார்யன் லோகோபகாரார்த்தமாக ஸகலஶாஸ்த்ரார்த்தஜ்ஞாநத்தை ஸம்பாதித்தாலும் தன்னுடையதான வர்ணாச்ரமதர்மாநுஷ்டாநங்களை ஸரிவர செய்யாவிடில் 'ஶீலவ்ருத்தபலம் ஶ்ருதம்' என்றபடி ஜ்ஞாநபலமான அநுஷ்டாநம் இல்லாததால் 'ந கூஹயதி கௌபீநம் ந தம்ஶமஶகாபஹம் । ஶுந:புச்சமிவாநர்த்தம் பாண்டித்யம் தர்மவர்ஜிதம் ||' [நாய்க்கு வாலிருந்தும் அதன் அசுத்தமான பின்பாகத்தை மறைக்க அது உபயோகப்படுவதில்லை. தன்னைக்கடிக்கிற ஈக்கள் கொசுக்கள் முதலியஜந்துகளை வெருட்டவும் யோக்யமில்லை. ஆகையால் அதற்கு வாலிருந்தும் அதனுடைய ப்ரயோஜனமில்லாமலிருக்கிறது. அதுபோல் அதிகஜ்ஞாநமிருந்தும் அநுஷ்டாநமில்லாவிட்டால் தனக்கு ஒருப்ரயோஜனமுமில்லை.] 'கபாலஸ்தம் யதா தோயம் ஶ்வத்ருதௌ ச யதா பய: । துஷ்டம் ஸ்யாத் ஸ்தாநதோஷேண வ்ருத்தஹீநே ததா ஶ்ருதம் ||' [மிகவும் பரிசுத்தமானகங்காநதீதீர்த்தமானது மண்டையோட்டில் வைக்கப்படுவதால் எப்படி அசுத்தமாகிவிடுமோ, பரிசுத்தமான பசுவின் பால் நாய்த்தோலில்வைக்கப்படுமானால் எப்படி அசுத்தமாகுமோ அப்படியே தர்மாநுஷ்டாநம் இல்லாதவர்களிடத்திலுள்ள வித்யையும்.] என்றபடி ஆசார்யனிடத்தில் ஸரியான அநுஷ்டாநம் இல்லாவிடில் அவனுடைய உபதேசம் பிறரால் ஆதரிக்கப்படமாட்டாதாகையால் வீணாகாதோ? என்கிற ஶங்காநிவ்ருத்தியை 'ஸ்வயமாசரதே' என்பது செய்விக்கிறது. இவ்விடத்தில் பாடக்ரமத்தைக் காட்டிலும் அர்த்தக்ரமமானது ப்ரபலமாகையால் மூன்றாவது வாக்யத்தை இரண்டாவது வாக்யமாக அநுஸந்திக்கவேணும்.

(தொடரும்)

(201-ம் பக்கத்தொடர்ச்சி)

பாதநசேஷமாக வந்ததென்பதை ஒன்பதிஞுயிரம் தெளிவித்தது. 'வேதநீரனே' என்று 10ம்-பாட்டின்கடையிலும், 'நீர்புரைவண்ணன் சீர்' என்று 11-ம் பாசுரத்தின் தொடக்கத்திலும் படித்ததில் 'வண்ணன்' என்பதற்கு ஸ்வபாவமென்ற பொருளை ஒன்பதிஞுயிரம் உரைத்தது. பள்ளத்தில் (தாழ்வில்) ஸ்வரஸமாய் ஸ்வாரஸிகமாய்ப்போவது நீரின் ஸ்வபாவம். 'கு௦ர௦வி௩தாய-ஷிரநிமுயம் உநஃ வயஸுநிராஹிர௱வம் வ௩தீவயெஸ' என்ற குமாரஸம்பவ ச்லோகத்தை நினைக்கவேணும். 'ஸவவாயஸூாஸ' என்று நிரதிசயமஹிமையுடைய ஸ்வமஹிமப்ரதிஷ்டிதமான பூமாவை சாந்தோக்யம் முதலில் வர்ணித்துவிட்டு பிறகு, 'ஸவவொவரிஷாஸ' என்று வர்ணித்ததால் ச்ருதி கருதிய இந்த ரஸத்தை இத்திருவாய்மொழி உபப்ரும்ஹணம் செய்கிறது. 'ஹ௱ரா' என்பது ஸர்வைச்வர்யமுடையது. 'ஸவெ௩ஜரொ௨வி வூயஶ௦ கயஹூாஷெவ ஹூாஸதொயாவதி' 'நிஷாஜாநா௦ நெதா' என்கிற தயாசதகச்லோகத்தில் 'கூீஷா௦ நிரூகூ௦ வ்யஷிமிவதொ௱ஹதிவி வூ-ஹ௱ுஷெஃ ஷொதொஹிஃ வூஸஹநீ௱ கவெ௯ ஸயெவி' என்று படித்ததும் தயாப்ரவாஹஜலஸ்வபாவம். வெள்ளமிட்டுமேட்டையும் பள்ளத்தையும் முழுகடித்து எல்லாவற்றையும் ஒரே சீராக்கிவிடும் ஸ்வபாவம்.

ஸ்ரீ:

ராம க்ருஷ்ணன்

திருமங்கையாழ்வார் ஸர்வேச்வரனிடத்தில் ஸர்வார்த்தக்ரஹணம் பண்ணி, விகஸிதஜ்ஞாநவாஞய், ஸர்வேச்வரன்கோயில்கொண்டெழுந்தருளியுள்ள திவ்யதேசங்களை மங்களாசாஸநம் பண்ணிக்கொண்டுவருகையில் 'திருஎவ்வுள்' என்னும் ஸ்தலத்தில் கோயில்கொண்டுள்ள எம்பிரானை மங்களாசாஸநம் செய்ய நினைக்கிருர். அப்போது பகவான் செய்தருளிய விபவாவதாரங்கள் நினைவிற்கு வந்துவிடுகின்றன. அவற்றில் ஸமீபத்தில் நடந்த விபவாவதாரலீலைகளும், பகவானுடைய ஸௌலப்யாதிகுணங்களும் ஆழ்வாரின் உள்ளத்தை உருக்கியுண்கின்றன. ஆழ்வார் தம்மைமறந்து, தாம் மங்களாசாஸநம்பண்ணவிரும்பியவரைவிட்டு ராமக்ருஷ்ணவதாரசேஷ்டிதங்களையும் அவற்றில் அவனுடைய ஸௌலப்யாதிகுணங்களையும்பாடி, பிறகு 'நாம் பாடவந்தது எவ்வுள் கிடந்தானையன்றோ!' என்று நினைக்கிருர். விபவாவதாரத்தில் ராமனும் க்ருஷ்ணனும் வந்தவனன்றோ இன்று உலகத்தோரனைவரும் ஸேவித்து நற்கதியையடைய எவ்வுளில் வந்து கிடப்பது! என்று ராமன் க்ருஷ்ணன் இவர்களுக்கும் இங்கு கோயில்கொண்டுள்ள எவ்வுள்கிடந்தானுக்கும் அபேதத்தை மனத்தில் எண்ணி அவர்களை எவ்வுள்கிடந்தானுக வந்துள்ளார் என்று பாடுகிருர்.

அதிலும் முதல்மூன்றுபாட்டுக்களில் முதலில் ராமனுக அநுபவித்துப் பின்னர் அவனே க்ருஷ்ணனுக வந்தருளி, பிறகு அவனே எவ்வுள் கிடந்தானுனன் என்று பாடுகிருர். ராமாவதாரத்திற்காட்டில் க்ருஷ்ணவதாரத்தில் பகவானுடைய ஸௌலப்யகுணத்தை மிகவும் ரஸித்து வெளியிடுகிருர்.

முதற்பாட்டில், முன்பாதியில் ராவணன் கபடமாக ஸந்யாஸி வேஷத்துடன் வந்து ஸீதையைக் கவர்ந்துசென்றதையும், பிறகு ராமன் ஸீதையின் பிரிவை ஸஹியாது கானகந்தோறும் சென்று தேடி ஹநுமான் மூலமாக இலங்கையிலிருப்பதையறிந்து, 'ஶரெஹூ௱ ஹூ௱ஶா௦ கரூகூா ஹூா௦ வரவஶாடிரூஃ। ஶா௦ நயெ௫ழி சாகு௱தூஷதஷ௫ ஸஜூஶா ஹவெஸ॥' என்று பிராட்டி எண்ணியபடி தன்னுடைய வீரத்தையும் பௌருஷத்தையும் காட்டி அந்த ஊரே நாசமாகும்படியான

பாணவர்ஷங்களை வர்ஷித்து ஸீதையை மீட்டதையும் பேசி அவனுடைய வீரத்தைக் கொண்டாடினர். பிற்பகுதியில் இவ்வளவு பராக்ரமசாலியான இவன் இடக்கை வலக்கை யறியாத இடைப்பெண்கள் திருட்டுப்பட்டம் கட்டி இழிவுகூறி ஏசும்படி கைகட்டி வாய் புதைத்து நின்றநிலையை நினைக்கிறார். என்னே இவனுடைய ஸௌலப்யகுணாதிசயம் இருப்பது! என்று எண்ணுகிறார். அவர்கள் இவனை எதற்கு ஏசுகிறார்கள் தெரியுமா? பெரிய திருடு ஒன்றுமில்லை. விளையாட்டுக் குழந்தை பசித்து ஒரு சிறிது வெண்ணெயை எடுத்து சாப்பிட்டுவிட்டானும். இது தாங்காமல் தாயிடம் வந்து 'இவன் திருடினான்' என்றனர். அதுவும் ஸாமாந்யமாகப் புகார் செய்யவில்லை; ஏசவும் ஏசினர். ராமாவதாரத்திற் காட்டிய வீரத்தை ஒளித்துக்கொண்டு மிகவும் ஸாதுவாய் கைகட்டி வாய்புதைத்துநின்ற அவன் மஹிமைதானென்! என்று புகழ்ந்து, அப்படிப்பட்ட எம் ஸ்வாமி இங்கு வந்து தனது வீரத்தையும் ஸௌலப்யத்தையும் ஒருங்கே ஆச்ரிதர்க்குக் காட்டிக்கொண்டு தன்னை வழிபடுமவருக்கும் ஸர்வக்ஷேமங்களும் உண்டாகவேண்டுமென்று எண்ணியன்றோ கிடக்கிறான்! என்று பாடுகிறார்.

காசையாடைமூடியோடிக்காதல்செய்தானவ
நாசமாகநம்பவல்லநம்பிநம்பெருமான் [னூர்
வேயினன்னதோள்மடவார் வெண்ணெயுண்டா
னிவனென்று
ஏசநின்றஎம்பெருமான் எவ்வுள்கிடந்தானே.

* * * * *

'ந பரதாராந் ஸ்ப்ருசேத்' என்று சாஸ்த்ரங்கள் நிஷேதித்திருக்க அவற்றை மதியாமல் ராவணன் ஸீதையின்மேல் ஆசைகொண்டு அவளை வஞ்சித்துத் தூக்கிச்சென்று சிறையில் வைத்துவிட்டான். அதனால் ராகவனுக்கு ஏற்பட்டசிற்றம்சொல்லத்தரமன்று. தன்னுடைய ஆஜ்ஞையாகிய ச்ருதி ஸ்ம்ருதிகளை அதிலங்கனம் பண்ணிய இவனைத்தீர்த்துக்கட்ட ஸங்கல்பம் கொள்ளுகிறான். அவனோ அபக்கன். அதிலும் ப்ரஹ்மா, ருத்ரன் முதலானவர்களுடைய வரங்களால் கொழுப்புற்று தனக்கு மரணமே கிடையாதென்று இறுமாந்திருக்கிறான். மற்றுமுள்ளார்போலன்றிக்கே வலிமையான சரீரமும், விசித்ரமான பத்துத்தலைகளும், இருபது கைகளும் உள்ளவனாக இருக்கிறான். இவனை எப்படி ராமன் கொன்றான் தெரியுமா? பகவான் ஸங்கல்பித்தால் எது நடக்காது? எப்படிப்பட்ட சத்ருதான் நாசமாகமாட்டான்? ஒரே பாணத்தினால் மாங்காயை அறுத்துத்தள்ளுவதுபோல் பத்துத் தலைகளையும் அறுத்துத்தள்ளினான். இதை நினைக்கிறார். இப்படி சாஸ்த்ரவிருத்த கர்மத்தைச் செய்தவர்களைத் தண்டிக்கும் நம் ஸ்வாமி பக்தர்களுடைய ஸர்வவிதசத்ருக்களையும் நாசம்செய்து பக்தர்களை ரக்ஷிக்கவெண்ணி எவ்வுளில் கிடக்கும் நேர்மைதானென்ன! என்று பாடுகிறார் இரண்டாம்பாட்டில்.

தையலாள்மேல்காதல்செய்ததானவன் வாளரக்
கன்
பொய்யிலாதபொன்முடிக ளொன்பதோ டொன்
றும்-அன்று
செய்தவெம்போர்தன்னில் அங்கோர் செஞ்சரத்
தாலுருள
எய்தவெந்தையெம்பெருமான் எவ்வுள்கிடந்
தானே.

* * * * *

மூன்றாவது பாசுரத்தில் ராமாவதாரத்திலும் க்ருஷ்ணாவதாரத்திலும் நடந்த சில கார்யங்களை நினைக்கிறார்.

ராமன் ஸீதையைப்பிரிந்தவுடன் கானகமெல்லாம் தேடிச்சென்றான். அங்கு ஓர் வானரம் கண்ணில்பட்டது. அத்துடன் தோழமை கொண்டு வல்லபையான பத்நியிடம் அந்தரங்க தூதுவனாகநியமித்து பதிலை எதிர்பார்த்தான். தூதுசென்ற வானரம் பிராட்டியைக்கண்டு தண்டனிட்டு ராமனின் வ்ருத்தாந்தங்களைச் சொல்லி ஸீதையை ஆச்வாஸப்படுத்தி, சத்ருவிடம் சென்று தன்பராக்ரமத்தையும் ஸ்வாமியின் வீரத்தையும் எடுத்துக்கூறி அவனது பட்டணத்தையே நடுங்கும்படிசெய்துவிட்டுத் திரும்பிவந்தது. தான் தூதுசென்றதையும், அங்கு ஸீதையைக்கண்டதையும் ஸ்ரீராமனிடம் விபரமாகக் கூறியது. இதைக்கேட்ட ராமன் எண்ணற்கரிதான கார்யங்களைச் செய்ய வல்லவனாகிலும் இம்மாதிரி தூதுசென்று உபகரிக்கமுடியாமற்போகின்றதே! என்று எண்ணுகிறான். இப்போதே யாருக்காவது

தூதுவனாக ஆகலாமென்று பார்த்தாலோ அது இயலவில்லை. பிறந்தது சக்ரவர்த்திகுலம். சக்ரவர்த்தியைத் தூதனுப்ப யார் ஒப்புக்கொள்ளுவார்கள்? இதையெல்லாம் சிந்தித்து அடுத்தபடி ஓர் அவதாரம் செய்து அதில் தௌத்யரஸத்தை யநுபவிக்கவேண்டுமென்று விரும்பினான். இந்த ஆசை க்ருஷ்ணாவதாரத்தில் நிறைவேறிற்று.

தூதுசென்ற வாநரம் சத்ரு இருக்குமிடமறிந்து அவனுடைய பராக்ரமங்களையும் அறிவித்தது. பிறகு ராமன் பகைவனிடம் நேரில் சென்று அவனையும் அவனது பட்டணத்தையும் நாசம்செய்துவிட்டு பிராட்டியை மீட்டு வெற்றிமாலை சூடினான். இதை ஆழ்வார் புகழ்ந்து பிறகு க்ருஷ்ணாவதாரத்தில் தூது போன அவனது எளிமையை எண்ணி மகிழ்கிறார். அன்று சக்ரவர்த்தியானவன் இன்று 'பாண்டவ தூதன்' என்று பிறர் சொல்லும்படி நின்றநிலைதானென்ன! தூதுசெல்வதால் அவனுக்கு ஏதாவது பயனுண்டோ? பாண்டவர்களும் கௌரவர்களும் சூதாடி நாடிழக்க, துர்யோதனன் பாண்டவர்களை நாட்டைவிட்டுத் துரத்துகிறான். பிறகு அவன் வைத்த பல நிபந்தனைகளையும் முடித்துக்கொண்டு நாட்டைத் திருப்பித்தரவேண்டுமென்று பாண்டவர்கள் கேட்டனர். அதற்குத் துர்யோதனாதிகள் இணங்கவில்லை. தர்மரக்ஷணம் பண்ணி, ஸாதுஸம்ரக்ஷணம் பண்ணவே அவதரித்த ப்ரபுவாகையால் இதுதான் ராமாவதாரத்தில் தனக்கேற்பட்ட குறையைத் தீர்த்துக்கொள்ளும் ஸந்தர்ப்பம் என்று எண்ணி பாண்டவர்களுக்காக உறுநெறியோர் தருமன் விடுதூதுக்கு உகந்து தூதுசென்றான். இதை நெஞ்சினில் கொண்டு ஆழ்வார் 'ஆஹா' என்ன பகவானின் கருணை! பக்தர்களிடம் எவ்வளவு வாத்ஸல்யம்! அவனுடைய ஸௌலப்யகுணம்தான் எத்தகையது!" என்று இன்புறுகிறார். 'ஒருவரிடம் க்ருபையும், வாத்ஸல்யமும் இருந்தால் எந்தக்காரியமும் செய்வதா? அதிநீசமான தூத்யத்தைச்செய்தானே என்னப்பன்!" என்று அவனது ஒவ்வொரு குணத்தையும் விவிதமான சேஷ்டிதங்களையும் எண்ணி உள்ளம் பூரிக்கிறார். இப்படி ராமனாயும், க்ருஷ்ணனாயும் வந்தவதரித்து நின்ற என் ஸ்வாமி வைத்யநாதனாய், பக்தாபீஷ்டபலப்ரதனாய் லோகஸம்ரக்ஷணார்த்தமாக எவ்வுளில் கிடக்கும் கோலம்தான் என்னே! நாதனுமாய் தூதனுமாய் நின்றநிலையை எவ்வுள் கிடந்தான் எடுத்துக்காட்டுமழகுதான் என்னே!" என்று களிக்கிறார். பாடுகையில் பகவானுடைய அநேக குணங்களையாவது, பல்லாயிரம் பெயர்களையாவது சொல்லிப்பாடலாமே! இப்போது அது அவரால் முடியவில்லை. 'அப்படிப்பட்ட மஹிமையுள்ள உன்னை வேறொருவிதமாகவும் பாடவல்லேன் அல்லேன். எவ்வுள்கிடந்தானே! நீ இங்கு கிடக்கும் அழகைக்கண்ட எனக்கு வேறு எதுவும் விளங்கவில்லை.' என்று அவனது இருப்பையே நினைத்து இம்மூன்று பாட்டுக்களிலும் 'எவ்வுள்கிடந்தானே!' என்றே பாடித் தலைக்கட்டியுள்ளார்.

'முன்னோர்தூதுவானரத்தின் வாயில்மொழிந்து- அரக்கன்
மன்னூர்தன்னை வாளியினால் மாளமுனிந்து— அவனே
பின்னோர்தூதனாதிமன்னர்க்காகிப்பெருநிலத்தார்
இன்னார்தூதனெனநின்றான்எவ்வுள்கிடந் தானே

ஸ்ரீ:

பிறப்பு

லோகத்தில் நிற்பன, ஊர்வன, பறப்பன, நடப்பவைகளில் மானிடராய் ஜனிப்பது மிகவும் அரிது. அதனிலும் ஆண் பெண் இரண்டில் ஆணுகப்பிறப்பது அரிது. அதனிலும் கூன்குருடு இல்லாமல் பிறப்பது அரிது. அதனிலும் பாரததேசத்தில்பிறப்பது அரிது. அவைதன்னிலும் 'கலௌ கலு ப⁴விஷ்யந்தி நாராயணபராயணா:......க்வசித் க்வசித் மஹாபா⁴கா³: த்³ரமிடே³ஷு ச பூ⁴ரிஶ:' என்கிறபடியே நாராயணபரர்கள் அவதரித்த த்ரமிடதேசத்தில் பிறப்பது அரிது. அதிலும் ப்ராஹ்மணனாகவும், நல்ல அறிவுள்ளவனாகவும், தான் கற்றதை பிறர்க்கு போதிக்கக்கூடிய ஶக்தியுள்ளவனாகவும் பிறப்பது அரிது.

இப்படி உயர்ந்தவனாக ஒருவன் பிறந்தாலும் அவனுடைய ஸ்திதி 'அத்³யைவ வா அப்³த³ ஶதாந்தே வா ம்ருத்யுர்வை ப்ராணினாம் த்⁴ருவ:' என்றபடி இன்றைக்கோ நூறுவருஷங்கள் கழித்தோ ப்ராணிகளுக்குச் சாவானது நிச்சயமென்றும், 'தோயபே²ந ஸமோ தே³ஹ:' [நீர்குமிழ் போன்றது சரீரம்] என்றும் 'மின்னின் நிலையில' என்கிறபடி மின்னல்தோன்றி மறையக்கூடியது என்கிற நிலையுள்ளதாயிருக்கிறது. அந்நிலையுமற்றது இச்சரீரம் என்னும் படியாயுமிருக்கிறது.

அதிலும் சிலநாட்கள் ஜீவித்திருக்குங்கால் இந்த சரீரமானது 'ப்ராதர் மூத்ரபுரீஷாப்⁴யாம் மத்⁴யாஹ்நே க்ஷுத்பிபாஸயா ஸாயம் காமேந பா³த்⁴யந்தே ஜந்தவோ நிஶி நித்³ரயா' [காலையில் மலமூத்ரத்தாலும், மத்யாஹ்நகாலத்தில் பசி தாஹத்தாலும், ராத்ரியில் காமவிகாரத்தாலும் தூக்கத்தாலும் மனிதன் பாதிக்கப்படுகிறான்.] என்னும்படி எப்பொழுதும் பாதையை உடையதாயும், நெய்க்குடத்தைப் பற்றிய எறும்புகள்போல் எங்கும்நிறைந்து நிற்கின்றநோய்களையுடைத்தாயுமிருக்கின்றது. இப்படி இருப்பதை அறிந்தவர்களும் மற்றுமுள்ளவர்களும் இச் சரீரத்திலுள்ள பற்றை விடுகிறார்களில்லை. அறிவுள்ள மனிதர்களுக்கும் ஶப்தாதிவிஷயங்களாலுண்டாகும் இந்த லோகத்திலுள்ள ஸுகத்தையநுபவிக்க இச்சரீரம் ஹேதுவாகையாலே இதில் பற்றுதல் அதிகமாயிருக்கிறது. மிகவும் அதிக பாபத்தின் பலத்தால் உண்டான புழுஜந்மத்தை யடைந்தாலும் அச்சரீரத்தை விடுவதற்கு அதற்கும் இச்சை உண்டாகிறதில்லை. ஒரு புழுவானது ஒரு வழியைக் கடக்கப் ப்ரயத்நம் செய்யும்போது குறுக்கே ஒரு வண்டிவரக் கண்டது. அதைப்பார்த்தவுடன் நம்மீது வண்டிசென்றால் நாம் இறக்கப்போகிறோமே என்று பயந்து அவ்வழியை மிகவும் அவஸரமாகக் கடந்தது. அதை அருகிலிருந்து பார்த்த வ்யாஸர் அதைப்பார்த்து 'ஏன் இவ்வளவு பயம்? இச்சரீரம் ஒழிந்தால் நல்லதுதானே' என்றார். அதற்கு அப்புழுவும் 'ஸ்வாமிந்! இச்சரீரஸம்பந்தம் ஏற்பட்டதும் இதுவும் மிகவும் போக்யமாக இருக்கிறது' என்றதாம். இப்படியாக புழு, பக்ஷி, மனிதர் எல்லோரும் சரீரவியோகத்தைக்கண்டு பயப்படாதவர்கள் இல்லை. எப்படி அஞ்சினாலும் 'ஜாதஸ்ய ஹி த்⁴ருவோ ம்ருத்யு:' என்றபடி பிறந்தவர்கள் இறந்தேதீரவேண்டும்.

இப்படி பிறந்து முடிந்துபோகிறவர்கள் க்ஷுத்ரமனிதர்கள் மட்டுமன்று. 'ஸஹஸ்ரயுக³பர்யந்தமஹர்யத் ப்³ரஹ்மணோ விது³:' என்று ஆயிரம் சதுர்யுகம் கூடிற்றொரு பகலாய் இப்படி ராத்ரியாய் இங்ஙனே நூற்றாண்டிருந்து ப்ராஹ்மாவும் மாண்டுபோகிறார்.

'க³ங்கா³யா: ஸிகதா தா⁴ரா யதா²வர்ஷதி வாஸவே। ஶக்யா க³ணயிதும் லோகே ந வ்யதீதா: பிதாமஹா:॥' என்கிறபடி பிறந்து மாண்டுபோன ப்ரஹ்மாக்கள் அஸங்க்யேயர்கள் என்று ஏற்படுகிறது.

பிறந்தபிறகும் ஶாஸ்த்ரத்தில் சொல்லி

யதைச் செய்து, நிஷேதித்ததைவிட்டு ஸரிவர நடந்துவந்தால் நற்கதியுண்டாகும். இல்லாவிட்டால் மறுபிறப்பு தான். அதுவும் பாபத்திற்கு தகுந்தபடி. நாம் முக்யமாக சரீரத்தாலும், வாயாலும், மனத்தாலும் பாபங்களைச் செய்கின்றோம்.

'ஶரீரஜை: கர்மதோஷைர்யாதி ஸ்தாவரதாம் நர: । வாசிகை: பக்ஷிம்ருகதாம் மானஸைரந்த்யஜாதிதாம் ॥' என்கிற மநுவசநம் சரீரத்தால் ஒருவனை ஒருவன் அடிப்பது முதலிய பாபங்களைச்செய்தால் அவன் அடுத்த ஜன்மத்தில் இம்மாதிரி செய்ய முடியாமல் மரம் முதலிய ஸ்தாவரமாகப் பிறக்கிறான். வாயினால் பரதூஷணை செய்தானேயாகில் மறுபிறப்பில் நன்றாக வாய்விட்டுப் பேசமுடியாத பக்ஷியாயும், ம்ருகமாயும் ஜனிக்கிறான். சரீரத்தாலும், வாயாலும் பாபங்களைச்செய்யத் துணிவற்ற சிலர் மனத்தால் சில பாபங்களைச் செய்வார்கள். அவர்கள் வரும் பிறப்பில் எல்லாமனிசரோடும் கூடியிருந்து களிக்கமுடியாத சண்டாளர்களாகப் பிறக்கிறார்கள் என்று கூறுகிறது.

ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வார் 'வேத நூற்பிராயம் நூறு மனிசர்தாம் புகுவரேலும் பாதியும் உறங்கிப்போகும் நின்றதில் பதினையாண்டு பேதை பாலகனதாகும் பிணி பசி மூப்புத்துன்பம் ஆதலால் பிறவிவேண்டேன்' என்று பயனற்ற பிறவியை வெகு அழகாக வெறுத்திருக்கிறார். இதன் பொருள்: 'ஶதாயு: வை புருஷ:' என்கிற நூறு வயதை மனிதர்கள் அடைந்தாலும் பாதி வயது தூக்கத்தால் போகும். பாக்கி பாதியில் சிலகாலம் பால்யத்தாலும், வ்யாதியாலும், பசியாலும், கிழத்தனத்தாலும் போகிறது. ஆகையால் கஷ்டங்களையநுபவிக்கவா மனிதனாகப் பிறக்க வேண்டும்? ஆதலால் இப்பிறப்புவேண்டாம் என்று.

இனி பிறப்பதற்கு முன்புள்ள கஷ்டங்களை சற்று பராமர்சிப்போம்—கர்ப்பவாஸகாலத்தில் ஜீவன்கள் பல கஷ்டங்களை அநுபவிக்கிறார்கள். கர்ப்பிணியாயிருக்கும்போது தாயானவள் தனக்குப் பிடித்தமான புளிப்பு காரம் முதலியவைகளை புஜித்தால், கர்ப்பத்திலுள்ள ஜீவன் அக் காரம் புளிப்பு முதலியவைகளை பொறுக்கமுடியாமல் மிகவும் ச்ரமப்படுகிறான். என்பதை 'கடுதீக்ஷ்ணோஷ்ணலவணரூக்ஷாம்லாதிபிருல்பணை: । மாத்ருபுக்தைருபஸ்ப்ருஷ்ட: ஸர்வாங்கோத்தித வேதன: ॥' என்ற இச்ச்லோகமறிவிக்கிறது. 'தத்ர லப்தஸ்ம்ருதிர்தைவாத் கர்மஜன்மசதோத்பவம் । ஸ்மரன் தீர்கமனுச்வாஸம்......' என்றபடி தைவவசத்தால் முன்பு பிறந்த பிறவிகளைத் தெரிந்துகொண்டு பெருமூச்சுவிட்டு, முன்ஜன்மத்தில் செய்த தொல்வினைகளின்பயனன்றோ இம் மலமூத்ரமிச்ரமான கர்ப்பவாஸம் பண்ண வேண்டியிருக்கிறது. அந்தோ! கர்ப்பத்தை விட்டு வெளிப்போகும் நாள் என்றோ! என்று ஏங்கி பகவானைத் துதிக்கிறான்.

ஜீவ:—

'ஸ்ரீபதிம் ஜகதாதாரமசேஷக்ஷயகாரணம் ।
வ்ரஜாமி ஶரணம் விஷ்ணும் ஶரணாகதவத்ஸலம் ॥
ஸ்நாயாஸ்ரோஹிதமேதோமேதஸா தயா பாத்ர ஸமுத்கே ।
ஸமாஹிதோஸ்மி தேன மஹதா நாத ஸம்ஸ்ருதௌ ॥
க்ருதம் வ்ருஜினஸம்யோகே யோ க்ஷுத் ஶாஹஸஹம் ।
ஸங்கார்த்தேன மயோத்தஹம் மதாஸ்ய ஹயஹாஸிந: ॥
யதி யோந்யா: ப்ரமுச்யேஹம் தத்ஸ்மிஷ்யே வஶம் தவ ।
தத்வாயம் கரிஷ்யாமி யேன முக்தம் ப்ரஜாஸ்யஹம் ॥
விஷ்ணுப்ரத்யக்ஷ வதிதோ யோத்யஹம் ஜானாதிநா ॥
உத்ஸ்ருஜ்ய தாவிவஸிதம் க்ஷமா நியதாஸ்யதே பஹி: ॥'

[கஷ்டங்களைப் போக்கடிக்கக்கூடியவனையும் ஶரணாகதவத்ஸலனையுமுள்ள லக்ஷ்மீபதியை ஶரணமடைகிறேன். உன் மாயாமோஹிதனாய் புத்ரகளத்ராதிகளிடத்தில் என்னுடையது என்கிற அபிமானத்தால் ஸம்ஸாரத்தை

யடைந்தேன். பெண்டுபிள்ளைகளின்பொருட்டு நல்ல கார்யங்களையும் கெட்ட கார்யங்களையும் செய்து அக்கர்மபலனை நாளொருவனே அநுபவிக்கிறேன். பலத்தை அடைந்த அவர்கள் சென்றுவிட்டார்கள். நான் யோனியைவிட்டு வெளிவந்ததும் எவ்வுபாயத்தால் மோக்ஷத்தை அடைவேனோ அவ்வுபாயத்தை அநுஷ்டிக்கிறேன். விண்மூத்ரகூபத்தில் (கிணற்றில்) விழுந்த என்னை ஜாடராக்நியும் கொளுத்துகிறது. ஆகையால் வெளியே போக ஆசைப்படுகிறேன்.] என்று ஜீவன் பலவாருக தன்னுடைய கர்ப்பவாஸத்தினுல் தனக்கேற்பட்ட கஷ்டங்களை நிவர்த்திசெய்யவேண்டுமென்று வாய்விட்டுக் கதறி கர்ப்பத்திலிருந்து வெளியே புறப்பட ஆசை இருப்பதாகச் சொல்லி பகவானை ஶரணமடைகிறுன். இவ்விதம் கர்ப்பத்தில் ஸ்துதிசெய்த ஜீவன் வெளிவந்ததும் ஶடவாயுவின் ஸம்பந்தத்தால் மறுபடியும் மதியிழந்து, ‘ஜாதமாத்ரோ நரஸ்ஸத்யோ வைஷ்ணவீ மாயயா ஹ்ருத உஜாஹ்யுக:’ என்னும்படியும், ‘சூதினைப்பெருக்கிக் களவினைத் துணிந்து செய்தும், சுரிகுழல் மடந்தையர் திறத்துக்காதலேமிகுத்துக் கண்டவா திரிந்தும், அதிலும், ‘வம்புலாங்கூந்தல் மனைவியைத் துறந்து பிறர்பொருள் தாரமென்றிவற்றை நம்பினுர் இறந்தால் நமந்தமர் பற்றி எற்றி வைத்து எரி எழுகின்ற செம்பினுலியன்ற பாவையைப் பாவி தழுவென’ யமபடர்கள் மொழிவார்கள் என்பதையும் மறந்து (அறியாமல்) ‘இறவு செய்யும் பாவக்காடு’ என்றபடி பாபங்களைச்செய்யத் துணிவு ஏற்படுகிறது. இவ்விதம் பாபங்களைச்செய்துவந்தால் ‘புநரபி ஜநநம் புநரபி மரணம் புநரபி ஜநநீ ஜடரே ஶயநம்’ என்றபடி மறுபடியும் கர்ப்பவாஸாதிதுக்கமும், ‘நவாநி க்ருஹ்ணாதி நரோऽபராணி’ என்னும்படி வேறு சரீரப்ராப்தியும்தான் உண்டாகும். இவ்விதம் மண்மிசையோனிகள்தோறும் மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்துள்ளோம்.

இனி இப்பிறவி என்னும் கடல் வற்றி துயரறுவதற்குச் செய்யவேண்டிய உபாயந்தான் யாதெனில்—‘மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே’ [என்னை ஶரணமடைந்தால் தாண்டமுடியாததான என் மாயையை தாண்டமுடியும்.] என்றும் ‘மாமேகம் ஶரணம் வ்ரஜ......மோக்ஷயிஷ்யாமி’ என்றும் கீதாசார்யன் சொல்லியபடி அவன் சரணல்லால் சரணில்லை என்றெண்ணி அவனை ஶரணமடைவதுதான் பிறவிநோய்அறுவதற்கு பாயம். ஸ்ரீஸ்வாமி தேசிகன் ‘அநாதிகாலமந்தாதியாக ஸம்ஸரித்துப்போந்த வடியேனுக்கு இனியொரு கர்ப்பவாஸாதிக்லேசமும் வாராதபடி திருவடிகளைத்தந்து ரக்ஷிக்கவேணுமென்று ....ஸ்ரீமானுன நாராயணன் திருவடிகளைப்பற்றி ஆத்மாத்மீயங்களையும் அவற்றைப் பற்றவருஞ்சுமைகளையும் அங்கே ஸமர்ப்பிப்பது’ என்று ஹிதோபதேசம் செய்திருக்கிருர்.

‘இஹைவ நரகவ்யாதேஶ்சிகித்ஸாம் ந கரோதி ய: । கத்வா நிரௌஷதம் தேஶம் வ்யாதிஸ்த: கிம் கரிஷ்யதி ॥’ என்றபடி இச்சரீரத்தோடு இத்தேசத்திலேயே நரகம்புகாமலிருப்பதற்கு வழிதேடவேண்டாவோ? வ்யாதியுள்ளவன் வைத்யனுள்ள தேசத்தைவிட்டு, சிகித்ஸகனில்லாத தேசத்திற்குச் சென்று ச்ரமப்படுவதற்கு ஒப்பாகும் இவன் ஶரணாகதி செய்துகொள்ளாமல் இறப்பது.

‘ந வேதாத்யயநாந்முக்தி: ந ஶாஸ்த்ர-பட[ன]நாதபி । ஜ்ஞாநாதேவ காரணம் ...... ஜ்ஞாநாதி ந காரணம்॥’ ‘ப்ரஹ்மஜ்ஞோ ப்ரஹ்மணா-ஹைவ ...... ப்ரஹ்மஸூ-வாஸீ நித்யம் ஶ்வாஸ கிம் ...... பவிஷ்யதி॥’ என்கிறபடி வேதாத்யயநத்தாலோ ஶாஸ்த்ரபடநத்தாலோ, உயர்ந்த ஆச்ரமியாவதாலோ ராமாநுஜாதிதர்சநத்தில் பிறந்தவன் என்பதாலோ மோக்ஷம் கிடைத்துவிடாது. கேவலம் ம்ருதாதி (திருமண் முதலியவைகளின்) தாரணத்தாலும் மோக்ஷம்கிடைப்பதரிது. ‘வேதா-க்ஷராணி.............ஹரிநாமாநி’ ‘வேதமேவ ஜபேந்நித்யம்’ என்று வேதத்தின் அக்ஷரங்கள் ஒவ்வொன்றும் பகவந்நாமாக்கள் என்றும், அதை நித்யம் ஜபிக்கவேண்டும் என்றிருந்தாலும், நான்காமாச்ரமத்திற்கு மோக்ஷாச்ரமம் என்று வ்யவஹாரமிருந்தாலும்

இவைகள்மட்டும் மோக்ஷப்ரதங்களாகமாட்டா என்றால், பாவம் (Idea) ஸரியாக இருந்தால் போதும் என்று சிலர் சொல்லிவருவதைப்பற்றி என்னென்று எழுதுவது? இவ்விதம் முன்கூறியதை பராமர்சித்தும் ‘ஶ்ரவ-ணாத்யேஷாம்’ நஹி ஸதி ஶாஸ்த்ரதோ நிஜ வத்ம’ என்கிற ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தியை ஸேவித்தும் ‘ப்ரஹ்மாபி ந ஜாநாதி தேவ மாயா விமோஹித:’ என்னும்படி மாயா பரவசர்களாய் சிலர் ஶரணாகதியில் நம்பிக்கையற்றிருக்கிறார்கள். அந்தோ! என்ன மாயையின் மாஹாத்ம்யம்! எல்லோரும் இப்படி இல்லாமல்சிலராவது தங்களாசார்யன் ஸந்நிதிக்குச் சென்று ஶரணாகதிசெய்துகொண்டு ஸம்ஸார துக்கத்திலிருந்து மீள்வார்களாக.

> ஸ்வல்பக்ஷண ஸாத்யேந க்ஷணிகஸ்த்ரீண:
> க்ஷேத்ரிண: ப்ரபத்த்யா க்ருபயா ஶ்ரிதம்
> ப்ரஸாதமதவா ப்ரஸாதயாமி। ஜந்ம-
> விச்சேதநே ப்ரீதிமதிஶ்ருதிஸ்ம்ருதி வாக்ய
> க்ஷிப்த்வா ஜ்ஞாநம் உபாஸிதவ்ய
> மோக்ஷ்யதி:॥

ஸ்ரீ:

நந்தனோத்ஸவ நினைவுகள்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

ஐந்தாவது மஹோத்ஸவம் காலை பெருமாள் நாச்சியார் திருக்கோலம் சாற்றிக்கொண்டு தங்கப்பல்லக்கில் தாழ எழுந்தருளினார். வழக்கம்போல் அதிகாலையிலேயே புறப்பாடு கண்டருளியாயிற்று. இலேசான வாஹனமான இதை விரைவாகவே எழுந்தருளப் பண்ணுவது எளிதாகையால் ஸ்ரீபாதம்தாங்குவோர் ஓட ஆரம்பித்தார்கள். அக்காரணம் பற்றித்தானோ இந்த மஹோத்ஸவத்தன்று மண்டகப்படிகள் அதிகம். திருக்கோயிலிலிருந்து நேராகத் திருவடி ஸந்நிதி. அதுதான் முதல் மண்டகப்படி.

* * * * *

நாச்சியார் திருக்கோலம் பூண்டவுடன் பெருமாளுக்கு நாச்சியாரோடு தந்மயத்வம் ஏற்படவும் அந்த திருவுள்ளத்தால் நோக்க, ‘பிரிந்துகிடந்து அவதியுற்ற நம்மை அன்று சேரவைத்தவர் திருவடியேயன்றோ!’ என்று நினைவிற்குவரவும் நேரே அங்கே எழுந்தருளி அவருக்கு மரியாதைகள் ஸாதித்தபடியோ என்று எண்ண இடம்தந்தது இந்த நிகழ்ச்சி. பட்டாபிஷேகஸமயத்தில் பெருமாள் முக்தாஹாரமொன்றைப் பிராட்டி திருக்கழுத்தில் சாற்றி ‘ப்ரதேஹி ஸுபகே ஹாரம் யஸ்ய துஷ்டாஸி பாமிநீ’ என்று அருளிச்செய்யவும் அந்த ஹாரத்தைத் திருவடிதானே ஸம்மானமாகப் பெற்றார்! அந்த துஷ்டி, ஸந்துஷ்டி திருவடிவிஷயத்தில் இன்னும் திருவுள்ளத்தில் உலாவுகிறது என்பதற்கு வேறு நிதர்சனம் வேண்டுமோ?

* * * * *

நாச்சியார் திருக்கோலமாகையால் நாச்சியார் விபூதிகளான ஸ்த்ரீகள் பல்லக்கைச் சூழ்ந்துகொண்டனர். ஆடவர்களுக்கு அருகிலிருந்து அநுபவிக்க வசதி அவ்வளவில்லை. ஸ்த்ரீகள் எப்படி அநுபவித்தார்கள் என்பதை புருஷர்கள் அறியமாட்டுவார்களா? ‘பும்பாவம் மனஸா யயு:’ என்ற கணக்கில், மற்ற தினங்களில் ஆடவர் பெண்மையை அவாவுவது இயல்பாயிருத்தல்போல், இன்று பெண்களை நாம் ‘புருஷர்களாகப் பிறந்திலோமே’ யென்று ஏங்கவைத்திருக்கும் அப்பெண்மையழகு என்று ஊஹித்துக்கொண்டோம். உள்ளத்தில் என்ன எண்ணினார்களோ ஸ்த்ரீகள். வாக்கால்மட்டும் ஆநந்தமாக வர்ணித்துக்கொண்டே ஸேவித்தார்கள். ‘திருக்காதுகளில் தொங்கும்தோடுகளைப் பார்த்தாயாடி!’ என்பாரும் ‘மாட்டலைப்பாரடி’ யென்றும், ‘வைர அட்டிகையைப்பார்’ என்று சுட்டிக்காட்டுவாரும் ஒருபுறம். ‘என்ன ஒய்யாரமடி ஜடைஸரம்! அந்த அகலமான ராக்கடியும் அதைச் சுற்றி விளங்கும் கனகாம்பரமும் இன்றைக்

கெல்லாம் பார்த்துக்கொண்டேயிருக்கலாம்போலிருக்கிறதே'- இது பின் ஸேவையை அநுபவித்தவர்களது உக்திகள். இவ்வர்ணனைகளெல்லாம் சற்றுப் பின்புறமாக நின்று எட்டிப் பெருமாளை ஸேவித்த எங்கள் காதில் விழவும் நாங்களும் ஆபரணங்களிலே ஊற்றம்கொண்டு ஆபாதசூடம் ஸேவித்தோம். பலவித கேள்விகள் எங்களுள்ளத்துதித்தன. என்றுமுள்ள நிமிர்ந்த நீண்முடியைக் காணோம். திருக்காதுகளில் மின்னும் மகரகுண்டலங்கள் வில்வீசக் காணோம். திருக்கையிலாழ்வார்களைக்காணோம். அவற்றுக்குப் பதிலாக காரார்குழலெடுத்துக் கட்டப்பட்டு சுட்டிகளும், கலிக்கத்துருய்களுமாகத் திகழ்ந்தன திருமுடியில்; திருக்காதுகளில் பல சந்த்ரர்கள் ஏககாலத்தில் உதயமானாற்போல் நீலம்கலந்த வெள்ளைச்சுடர்வீசும் நல்ல வைரங்கள் விளங்கும் தோடுகள். திருக்கைகளில் அழகிய இரு பத்மங்கள். உண்மையிலேயே இவர் பெருமாளா, பிராட்டியேயா என்று எங்கள் மனம் தர்க்கிக்க ஆரம்பித்சது. அப்படியே ஸேவித்துக்கொண்டே நிற்கும் போது இரண்டு அம்சங்கள் எங்களுக்குத் தென்படவும் எங்கள் ஐயம் நீங்கியது. திருமார்பில் பெரிய பிராட்டியார் திகழ்ந்தார். யஜ்ஞோபவீதம் என்றும்போல் ப்ரகாசித்தது. 'ஸரி, பெருமாள்தான் இவர் நாச்சியார் வேடம்பூண்டிருக்கிறாரென்பது உண்மையே' என்று உணர்ந்தோம்.

* * * * *

பட்டர் அழகியமணவாளனது நாச்சியார் திருக்கோலத்தைமங்களாசாஸநம் செய்தருளி, 'உமக்கு இவ்வேடம் எல்லாவிதத்திலும் அமைந்தபடியே! இருப்பினும் திருக்கண்களில் அஜ்ஞாதநிக்ரஹையான எங்கள் ஸ்ரீரங்க நாச்சியாரது குளிர்ந்தகடாக்ஷமில்லாததுமட்டும் கோட்சொல்லி உம்மைத்தெரிவித்துவிடுகிறது.' என்று அம்மஹாபுருஷனுக்கஸாதாரணமான சாதுர்யம்ததும்ப அருளிச்செய்தனராம். அதற்கிங்கவகாசமில்லை. என்? அங்கே அழகியமணவாளன், 'வர்த்ததே ஸாவரோத:' என்று கண்டவர்களெல்லாம் அநுஸந்திக்கும்படி பும்ஸ்த்வம் ஒருபடி ஓங்கி நிற்பவன். இங்கே அருளாளன். அருளே நிரூபகமாகவுடையவனாதலால் திருமேனி முழுவதும் அருளாலாயது. திருக்கண்களோ 'அநுகம்பாஸரிதம்புஜைரபாங்கை.' என்றபடி தயாபரிஷ்வங்கதரங்கங்களான அபாங்கவீக்ஷணங்களை என்றுமேவுடையவைகள். ஆகையால் திருக்கண்கடாக்ஷங்களில் வாசியறிய வகையில்லை.

* * * * *

திருமகள் உறையும் திருமார்பும் இடது திருத்தோளில் விளங்கும் முப்புரிநூலுமே இவனைக்காட்டிக்கொடுத்தபடி என்று சொன்னேனல்லவா? இறையுமகலில்லாத் திருமகளாரன்பரிவரேயென்று அன்று புதுமுறையில் தோன்றியது. வாமனாவதாரத்திலும் கூட பிராட்டி அகலாதமை ப்ரஸித்தம். ப்ரஹ்மசாரிவேஷத்துக்கு ஹானிவிளைவிப்பதாய், பிச்சையெடுக்கும் நிலைக்கும் சேராதது அப்போது பெரியபிராட்டிஸம்பந்தம். இருப்பினும் அவளும் விடவில்லை. இவனும் அவளை விடவில்லை. 'க்ருஷ்ணாஜிநேந ஸம்வ்ருண்வந் வதூம் வக்ஷஸ்தலாலயாம்' என்றும் 'க்ருஷ்ணாஜிநம் யவநிகாம் க்ருதவாந் ப்ரியாயா:' என்றும் அநுஸந்திக்கப்பட்டபடியே அவளை மறைத்துவைத்து மாணாயிருந்து மண்ணிரந்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்று அவன் பூண்டுள்ளது ஸ்த்ரீவேஷம். ஸ்த்ரீரத்னமான பிராட்டியைத் திருமார்பிலே தாங்கியே நின்றான் என்றால் 'பெண்ணாளனென்று, 'பெண்ணகலம் காதல் பெரிதே'ன்றும் 'பித்தர் பனிமலர்மேல் பாவைக்கும்' என்றும் அநுஸந்தானங்களின் உண்மைகளெல்லாம் ஒரு படி நம்மாலும் உணரப்படுவனவன்றோ? 'இவர் வாயில் நல்வேதமோதிய வேதியர்' என்பதற்கேற்ப ஆச்சர்யமான யஜ்ஞோபவீதமும் இவன் ஆணேயென்று அறுதியிட்டது.

* * * * *

முன் அம்ருதமதனகாலத்தில் அஸுரர்களை வஞ்சிக்க இவன் ஒரு ஜகந்மோஹினியாய் வடிவெடுத்தான் என்று புராணங்களில் காண்கிறோம். (இதைக்கொண்டே நாச்சியார் திருக்கோலத்தை 'மோஹினி வேஷம்' என்றுகூட சிலர் வ்யவஹரிப்பதுண்டு.) 'பெண்ணாகியின்னமுதம் வஞ்சித்தான்' என்ற ப்ரஸித்தி அவனுக்குண்டு. அன்றுகூட திருமார்பில் மேலாடையின்கீழ் மறைவாக

பெரியபிராட்டியார் அகலாதிருந்து அவ் வேடிக்கையைக் கண்டு ரஸித்திருந்தாள் என்று நாம் நிச்சயமாகச் சொல்லக்கூடுமல்லவா? மீண்டும் ஒருமுறை சிவபிரானுக்காகப் பெருமாள் இவ்வேடத்தைப் பூண்டபோது அப்போதும் கூடவிருந்து பிராட்டியார் என்ன நகைச் சுவையை அநுபவித்திருப்பள் காமவெறி கொண்டு சிவன் துரத்திவரும்போது? இந்த எண்ணங்களெல்லாம் நாச்சியார் திருமார்பில் ப்ரகாசிக்கும் நாச்சியாரால் தூண்டப் பட்டன.

* * * * *

'வரத:' என்பது புல்லிங்கம்; 'வரதா' ஸ்த்ரீலிங்கம். வரதன் வரதாவாகக் காட்சி யளிப்பது இந்த ஐந்தாம் நாள் காலை மஹோத்ஸவத்தில். 'வரதா'வுக்கும் வரதமஹிஷிக்கும் நெடுவாசியுண்டு. வரங்கொடுப்பவன் வரதன். வரங்கொடுப்பவன் பத்நீ வரதமஹிஷீ. வரங் கொடுப்பவள் வரதா. அத்திகிரி அருளாளனை அருளாளன் என்று வ்யவஹரிக்கும் போது புமான் என்று த்வனிக்கிறதே, புமான் தண்டதாரையிற்றே. அருள்மிகுத்ததொரு வடிவில் விளங்கும் இப்பெருமானை பும்ஸ்த்வம் கலசாத ஒரு ஶப்தத்தால் வ்யவஹரிக்க வேண்டாவோ? என்றுதோன்றும்போது இந்த நாச்சியார் திருக்கோலம் கண்முன் தோன்றி இது பெண்தன்மையுடைய தெய்வமே என்று காட்டிக்கொடுக்கிறது. அப்பொழுது 'வரதா' என்ற திருநாமமே பொருத்தமுடையதாகக் காண்கிறது. இந்த மாயமாற்றம்தான் வரதராஜபஞ்சாசத் ஸ்தோத்ரத்தில் ஸ்ரீமந் நிகமாந்தமஹாதேசிகன் செய்தருளும் அத்புதம். அதின் முதல் ச்லோகமும் நிகமந ச்லோகமும்மட்டுமே பெருமாளைப் பரோக்ஷத்தில் வைத்துப்பேசுமவை. நடுவிலிருக்கும் 48 ச்லோகங்களும் ப்ரத்யக்ஷமாகப் பெருமாள் முன்னிலையில்விண்ணப்பிக்கப்பட்டவை. முதல் ச்லோகத்தில் 'கோபி காருண்யராசி:' என்று பேசியவர் நிகமந ச்லோகத்தில் 'காபி புவநஜநநீ தேவதா' என்று அதே தேவதையைக் குறிக்கிறார். வரதன் வரதாவாகக் காட்சிளிக்கிறார். ஸ்தோத்ராநுஸந்தாநம் செல்லச்செல்ல இவனை புமானாகச் சொன்னாலும் அவன் பேரருள் ஒரு படி பழுதுபட்டுப்போகுமோவென்று பயந்து வரதா என்று தலைக்கட்டி ஹ்ருஷ்டராகிறார் ஸ்வாமி. அந்த வரதாவின் காட்சி க்ரந்த மூலமாக வரதராஜபஞ்சாசத்தில் கிடைப்பதை நேருக்குநேராக இக்கட்கண்ணாலேயே காணப் பெறுவது அருளாளனது ஐந்தாம் நாள் காலை மஹோத்ஸவத்தில்.

* * * * *

மாலை யாளி வாஹனம். மஞ்சளாடையோடு இன்று வாஹனமண்டபமெழுந்தருளும் ஸேவை இச்சிறியேனுக்குப் பலவாண்டுகளுக்கு முன் ஒரு தடவையும், க்லேசம் மிகுந்த 1947-ம் ஆண்டு ஒரு தடவையும் தனிப்பட்ட வரந்தருமிவ்வழகனது பரத்வத்தையும், பாவநத்வத்தையும், பரிவையும் போதித்த ஒரு திவ்யஸேவை. அம்பலத்தில் அவிழ்க்கலாகாத படி தனிமையில் செய்த பேரருளை விவரிக்க மனம் இடம் கொடுக்கவில்லை. அடுத்த ஸேவைக்குச் செல்ல விடைபெறுகிறேன்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஆழ்வார் ஆசார்யர்களின் அவதாரம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

நாதமுனிகள்

மேலும் இம்மாதத்தில் நம்முடைய ஸம்ப்ரதாயத்தை ப்ரவர்த்திப்பித்த ஸ்ரீமந்நாதமுனிகள் அனுஷதிருநக்ஷத்ரத்தில் வீரநாராயணபுரத்தில் ஈச்வரமுநிகளுக்கு திருக்குமாரராக அவதரித்தார். இவர் திவ்யதேசயாத்ரையாகச் செல்லும்போது திருக்குடந்தையில் ஆராவமுதன் ஸந்நிதியில் 'ஆராவமுதே' என்கிற திருவாய்மொழியை சிலர் அநுஸந்தாநம் செய்ய அந்தத் திருவாய்மொழியிலுள்ள சொல்லின்பத்தையும் அர்த்தத்தின் சீர்மையையும் தான் கண்டு இதைச்செய்தவர் இதின்

முடிவில் 'ஓராயிரத்துளிப்பத்தும்' என்றிருப்பதைப் பார்த்தால் இதுபோல் ஆயிரம் பாசுரமிருக்கவேண்டுமென்று தோன்றுகின்றதே' என்று அவர்களைக் கேட்க அவர்கள் 'இதை அருளினவர் ஆழ்வார் திருநகரியில் அவதரித்த ஆழ்வார். எங்களுக்கு இந்தப் பத்துப் பாசுரங்கள்தான் தெரியும். மற்றவை தெரியாது' என்றார்கள். இவர் இந்த பாசுரத்தின் அழகைக்கண்டு இந்த ஆயிரத்தையும் கற்க அதிக ஆவலுடையவராய் திருக்குருகூருக்குச் சென்று அங்கு விசாரித்ததில் விவரம் ஒன்றும் கிடைக்காதவளவில் மிகவும் வருந்தியிருக்க அங்கே மதுரகவி ஆழ்வார் வம்சத்தில் பிறந்த பராங்குசதாஸர் என்கிறவர் நம்மாழ்வார் விஷயமாக ஸ்ரீமதுரகவிகள் அருளிச்செய்த 'கண்ணிநுண்சிறுத்தாம்பு' என்கிற ப்ரபந்தத்தை இவருக்கு உபதேசித்து 'இதை இங்கேயே பன்னீராயிரம் தடவை ஆவ்ருத்தி செய்தால் நம்மாழ்வார் ப்ரத்யக்ஷமாகி உமக்கு திருவாய்மொழியை உபதேசம் செய்வர்' என்று நியமித்தார். அதன்படியே ஸ்ரீமந் நாதமுநிகள் கண்ணிநுண்சிறுத்தாம்பு என்கிற ப்ரபந்தத்தை ஆவ்ருத்தி செய்து யோகதசையில் நம்மாழ்வாரை ஸாக்ஷாத்கரித்தார். ஆழ்வாரும் இவருக்கு பரமக்ருபையோடு திருவாய்மொழியையும் மற்றைய மூவாயிர திவ்யப்ரபந்தங்களையும் உபதேசித்தார். 'இவருக்கு ஸ்ரீ மதுரகவிகள் முதலாக உண்டான ஸம்ப்ரதாய பரம்பரையாலும் திருவாய்மொழி முகத்தாலும் யோகதசையிலே ஸாக்ஷாத்க்ருதராயும் நம்மாழ்வார் ஆசார்யரானர்' என்று ஸ்ரீ குருபரம்பராதிகாரதிவ்யஸூக்தி. இப்படி ஆழ்வாருக்குப் பிறகு லுப்தமாய்ப்போன இந்த ஸம்ப்ரதாயத்தை நமக்குக் காணக் கொடுத்த மஹான் இவர். ஆகையாலேயிறே ஸகல இருட்டையும் போக்கக்கூடிய நம் தர்சநத்தை 'நாயொவஜூம் ஷுவ்யதழ்' என்றது. இந்த மஹான் அவதரித்திராவிடில் நமக்கு உஜ்ஜீவனமே கிடையாது என்று சொல்லலாம். இந்த மஹான் பண்ணின மஹோபகாரத்தையிட்டுத்தான் ஆளவந்தார் தம்முடைய ஸ்தோத்ரரத்நத்தின் ஆதியில் அடிக்கடி இவரை வணங்குகிறார். 'ஷுவவிபஸ்ய ஹமவதஃ ஷுவிஷயஷு-தள யொஜ-யிதஜீவ்ஹ தஃ ஷொத்ரும் தாவஹாஷாம், ததொ வ்யஸாயாநெண்யநொவகாஸகதஸோ நாயஉ-நிரெவ ஒஉ நஷவ்யஃ' என்று அவதாரிகையிடுகிறார் ஸ்ரீஸ்வாமி தேசிகன் ஸ்ரீஸ்தோத்ரரத்நபாஷ்யத்தின் மூன்றுவது ச்லோகத்தில்.

நம் தர்சநத்திற்கு அஸாதாரணமாய் உபகரித்தவர்களில் ப்ரதாநமானவர்கள் மூவர். ஸ்ரீமதுரகவிகளும், ஸ்ரீநம்மாழ்வாரும் ஸ்ரீமந் நாதமுநிகளுமே இந்த மூவராகிறார். இவர்கள் திருவவதாரச்சேர்த்தியும் இப்படியே அழகாக முறையே அமைந்திருக்கிறது. அதாவது— சித்திரை வைகாசி ஆனியாகவிழ்ந்திருக்கிறது. அதிலும் நடுநாயகமாக நம்மாழ்வார் வைகாசி மாதத்தில் திருவவதரித்துள்ளார். இவருக்கு சிஷ்யர்களாய் அமைந்துள்ள இருவர்களுள் மதுரகவிகள் ஸாக்ஷாத்தாக ஆழ்வார் திருவடிகளில் ஆச்ரயித்து ஆழ்வார் திருவாய்மலர்ந்தருளிய பாசுரங்களை அப்படியே பட்டோலை கொண்டு ஸம்ப்ரதாயத்தை வ்ருத்திசெய்தார். மற்றொருவரான நாதமுநிகள் ஆழ்வாரை யோகத்திலே ஸாக்ஷாத்கரித்து திவ்யப்ரபந்தங்களை அதிகரித்தார். மற்ற திவ்யதேசங்களில் ஒருவாறு இருந்தாலும் ஸ்ரீகாஞ்சியில் நம்மாழ்வார் மதுரகவிகள் நாதமுநிகள் எப்போதும் ஏகாஸநத்தில் வீற்றிருக்கிறார்கள். 'பேடையிரண்டொடானமடைந்து பிரிந்திடாவகை பேசலாம்' என்று பேருளாளன் தம் நாச்சிமாருடன் எப்போதுமிருப்பதுபோல் இவர்களும் பிரியாமலிருப்பதை ஸேவிக்குங்கால் இவர்கள் நம் ஸித்தாந்தத்திற்கு பண்ணியிருக்கும் மஹோபகாரம் நன்கு வெளிப்படும். மூவர் திருநக்ஷத்ரங்களிலும் மூவருக்கும் உற்சவம் முதலியதுகள் இன்றும் நடந்துவருகின்றன. விசிஷ்டபரப்ரஹ்மம்போல் இதொரு விசிஷ்ட ஆசார்யசேர்த்தி.

இவர் அருளிய க்ரந்தம்— ந்யாயதத்வமும் யோகரஹஸ்யமும். ஸ்ரீஸ்வாமி தேசிகன் தமக்கு இவரிடத்தில் உண்டான உபகார ஸ்ம்ருதியை கீழேயுள்ள பாசுரத்தால் வெளியிடுகிறார். இவர் தம் திருவடிகளில் ஆச்ரயித்த மேலையகத்தாழ்வான் கீழையகத்தாழ்வான் என்பவர்களுக்கு த்ரமிடவேதங்களின் இனிமையானகாநத்தை தாளஶாஸ்த்ரத்

துடன் உபதேசித்த பரமோதாரர். இவரன்றி நமக்கு வேறு தஞ்சமில்லை என்று அறுதியிடலாம்.

காளம்வலம்புரியன்ன நற்காதலடியவர்க்கு
தாளம்வழங்கித்தமிழ்மறை இன்னிசைதந்த வள்ளல்
மூளும் தவநெறிமூட்டிய நாதமுனிகழலே
நாளுந்தொழுதெழுவோம் நமக்கார்நிகர் ஞானிலத்தே.

இன்னும் இம்மாதத்தில் ஸ்வாதியில் எங்களாழ்வான் அவதரித்துள்ளார். வடக்குத் திருவீதிப்பிள்ளையும் இம்மாதத்தில் ஸ்வாதியில் அவதரித்தார். இவர் நம்பிள்ளை திருவடிகளில் ஆச்ரயித்தவர். இவர் அருளிய க்ரந்தம் ஈடு முப்பத்தாறாயிரப்படி என்பது. இது திருவாய்மொழிக்கு வ்யாக்யானரூபமாயும் அமைந்துள்ளது. இவர் தம் ஆசார்யரான நம்பிள்ளை ஸந்நிதியில் தாம் திருவாய்மொழி காலக்ஷேபம் செய்யும்போது அப்படியே தம் ஆசார்யன் ஸாதித்ததை பட்டோலைகொண்டார். அதே முப்பத்தாறாயிரப்படியாக அமைந்தது. வெகு விஸ்தாரமான க்ரந்தம். ரொம்பவும் பகவத்விஷய அநுபவத்திற்கு யோக்யமாய் அமைந்துள்ளது.

வைகாசி ஆனிமாதங்களில் திருவவதரித்த ப்ரதான ஆசார்யர்களைப்பற்றி வரைந்தோம். இனி ஆடி மாதத்தில் திருவவதரித்தவர்களைப் பற்றிச் சற்று தெரிந்துகொள்வோமாக.

ஆடியில் திருவவதரித்தவர்களில் முக்யமானவர்களில் ஸ்ரீ ஆண்டாளும் ஆளவந்தாரும்.

‘[illegible]-நாழ்’ என்கிறபடி அனேகங்களான வேதவாக்குகளுக்கும் துதிக்முடியாதபடி வெகு தூரத்திலுள்ள ஆண்டாளின் மஹிமையானது நம்போலுள்ள அற்பமதிகளின் துதிக்கு எப்படி விஷயமாகும். எனினும் ஆண்டாளின் குணங்களானவை வெறுமனேயிருக்கவொட்டாது வாய்திறந்து துதிக்கச்செய்கின்றன. ஆழ்வார் ஆசார்யாளின் திருவவதாரம் அவர்களருளிய திவ்யப்ரபந்தங்கள் இதுகளைப்பற்றிச் சுருக்கமாக எழுதுவதே வ்யாஸங்களின் முக்யநோக்கமாயிருந்தாலும் ஆண்டாள் என்று சொல்லும்போதே ஓர் தனி அநுபவம் ஏற்படுவதால் கீழ் வ்யாஸத்தில் விரிவுக்கு அஞ்சி நம்மாழ்வாரின் பகவதநுபவத்தைப் பற்றிச் சிறிதளவுகூட தொடாது போயிருப்பினும் இங்கு அவ்வாறு ஆண்டாளின் பகவதநுபவத்தைப்பற்றி அடியோடு தொடாது போகமுடியாதிருக்கிறது. சற்று விரிவானாலும் இக்குற்றம் ஆண்டாளின் விலக்ஷணமான பகவதநுபவத்தால் நேரிட்டது என்று கருதி ஸ்வாமிகள் க்ஷமிக்கவேணும்.

பெரியாழ்வார் வடபெருங்கோயிலுடையானுக்கு என்று ஏற்படுத்தப்பட்ட ஓர் நந்தவனத்திலிருந்து பூக்களைக் கொய்து மாலைகளாகக் கட்டி ப்ரதிதினம் எம்பெருமானுக்குச் சாற்றி தமக்குக் கிடைத்த தேஹம் ஸார்த்தமாயிற்றென்று எண்ணி திருவுள்ளமுகந்து வந்தார். இப்படியிருக்கும்நாளில் ஓர் ஆடிப்பூர நன்னாளில் அந்த நந்தவனத்தில் பூக் கொய்யும்போது ஓர் துளசிச்செடியின் கீழ் அழகியதொரு திருப்பாவையைக் கண்டார். உடனே அக்குழந்தையின் அழகைக் கண்டு பின்னைகொல், நிலமகள்கொல், திருமாமகள்கொல், பிறந்திட்டாள் என்று வாரியெடுத்து உச்சிமோர்ந்து இது நமக்கு ஓர் பேரின்பமே என்று எண்ணி அருமையாகவளர்த்துவந்தார். இக்குழந்தைக்கு கோதை என்று திருநாமம் சாற்றினார். கோதையும் மூலையோமுழுமுற்றும் போந்திலாத பர்வம்முதல் பெரியாழ்வார் வயிற்றில் பிறவியாலும் தானான தன்மையாலும் கண்ணனிடம் பேராத காதல்பூண்டு வளர்ந்து வந்தாள். கோதையானவள் வீதிவாய் விளையாடும்போது மணலில் எம்பெருமானின் சங்கென்ன, சக்கரமென்ன, தண்டென்ன, வாளென்ன, வில்லென்ன இவைகளையே எழுதுவளாம். திவ்யதேசத்தில் பிறவியைப் பெற்ற குழந்தைகளுக்கு இதொரு பாக்யம். பெருமாள் புறப்பாடுகள் கண்டருளும்போது குழந்தைகள் வீதியைப் பெருக்கிக் கோலமிட்டு அழகாக வைப்பர்கள். ஓர் பெண்ணை ஒரு திவ்யதேசத்திலிருக்கும் பிள்ளைக்கு நிச்சயம் செய்தபோது ஸ்ரீ திருக்கோட்டியூர் ஸ்வாமி இந்த பெண்ணுக்கு நல்ல பாக்யம் கிடைத்தது.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புகள்

[illegible]

தர்மம் இன்னது, அதர்மம் இன்னது என்று சாஸ்த்ரத்தையும் அதைப்பின்பற்றி நடக்கும் பெரியோர்களின் ஆசாரத்தையும் கொண்டுதான் நாம் நிர்ணயித்துக்கொண்டு அதர்மத்தைவிட்டு தர்மத்தை உறுதியுடன் அநுஷ்டிக்கவேண்டும். இதை ஆஸ்திக்யபுத்தியுள்ளவர்களனைவரும் பெரும்பாலும் ஒப்புக்கொள்ளுவார்கள். ஆனால் நடைமுறையில் நாம் எவ்வளவுதூரம் இதைப் பின்பற்றி வருகிறோமென்பதைச் சற்று ஆராய்வோம்.

சில கார்யங்கள் நம் மனத்திற்கு தர்மமென்றும் அதர்மமென்றும் தோன்றுகின்றன. அவற்றைச் செய்ய ஆரம்பிக்கிறோம். சாஸ்த்ரரீதியிலோ அல்லது பெரியோர்களின் ஆசாரப்படிக்கோ அவை நிஷித்தங்களன்றோ என்று உட்புகுந்து விசாரிக்க நாம் முற்படுவதில்லை. சாஸ்த்ர விருத்தங்களென்று நமக்கே சில ஸமயங்களில் சில கார்யங்கள் தோன்றினாலும் பணத்திற்காகவோ புகழுக்காகவோ ஆசைப்பட்டு அவைகளைத் தயக்கமில்லாமல் செய்ய ஆரம்பித்துவிடுகிறோம். தெய்வத்தினிடத்தில் கொஞ்சம் பயமிருப்பதால் ‘நாம் செய்தது தவறு’ என்று நம் மனத்துக்குள்ளேயே சில ஸமயங்களில் கொஞ்சம் அச்சமேற்படுகிறது. ‘ஐயோ மதியிழந்து இப்படிச் செய்துவிட்டோமே!’ என்று பச்சாத்தாபப்பட்டு ‘இனி இம்மாதிரி தகாதகார்யங்களைச் செய்வதில்லை’ என்று உறுதிபூண்டு செய்த தவறுக்கு ப்ராயச்சித்தம் செய்துகொள்ள முன்வர தைர்யம் ஏற்படுவதில்லை. ‘ப்ராயச்சித்தம் செய்துகொள்வது என்றால் நாம் தவறு செய்துவிட்டோமென்று அனைவருமறிய ஒப்புக்கொள்வதுபோலத்தானே! இதைவிட வெட்கக்கேடு நமக்கேது?’ என்று தோன்றுகிறது. அந்தத் தவறுக்குப் ப்ராயச்சித்தமாக சில நல்ல கார்யங்களைச் செய்ய நமக்குள்ளேயே நாமே முடிவுசெய்துகொண்டு அந்தக்கார்யங்களைச் செய்துவிட்டு ஸகல தோஷமும் நம்மைவிட்டுப் போய்விட்டதாக எண்ணிக்கொள்ளுகிறோம். இப்படிச் செய்துவருவது நம்மையே நாம் அறியாமல் ஏமாற்றிக்கொண்டு அதோகதியில் போவதில்தான் வந்துமுடியும்.

* * * * *

ஸந்த்யாவந்தனத்தைத் தவறாமல் செய்துவரவேண்டியது என்று சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறதென்று ஒருவருக்கு நன்றாகத் தெரியும். மந்த்ரங்களும் தெரியும். ஸ்வரத்தில் சிறிது தவறு இருந்தாலும் அக்ஷரப்பிசகு இராது. ஆயினும் அதற்குரிய காலத்தில் ஸந்த்யாவந்தனத்தைச் செய்ய அவருக்கு ‘கை’ வருவதில்லை ஸந்த்யாவந்தனம் செய்தால் ஸ்நேஹிதர்கள் பழிப்பார்கள் என்ற பயமோ அல்லது சோம்பலோ தெரியாது. தினந்தோறும் காலையில் எட்டு மணிக்கு ஹிந்தியில் (அவருக்கு ஹிந்திக்கு அர்த்தம் தெரியாது) ஒரு பாட்டு பாடுவார் அவ்வளவுதான். ‘ஸந்த்யாவந்தனம் தெரிந்திருந்தும் அதைச் செய்யாமலிருக்கிறோமே’ என்று முதலில் கொஞ்சம் பயமிருந்தது. பிறகு, ஹிந்திப்பாட்டு பாடிவிட்டதால் அந்த தோஷம் போய்விட்டதென்று தோன்றிற்று. பின்னும் சில நாட்கள் கழிந்ததும் ஸந்த்யாவந்தனம் பண்ணுவதைவிட ஹிந்திப்பாட்டு பாடுவதுதான் சிறந்தது என்ற எண்ணம் உண்டாகத்தொடங்கியது. அவருக்கு நம் ஸம்ப்ரதாயத்தின் அடிப்படையான தத்வங்களைப்பற்றி கொஞ்சம் ஜ்ஞானமும் உண்டு. பல உபந்யாஸங்களைக்கேட்டிருக்கிறார். இருப்பினும் அவர் நடவடிக்கை இதுதான்.

இப்படியே மற்ற தர்மாதர்மவிஷயங்களிலும் தமக்குள்ளேயே தமக்குத் தோன்றியபடி ஒரு முடிவுசெய்துகொண்டு நடப்பது அவர்வழக்கம்.

ஒருவருக்கு ராஜாங்கத்தில் கண்யமான ஒரு உத்யோகம். அந்த உத்யோகத்துக்கேற்பட்ட சம்பளத்தைக்கொண்டு அவரும் அவர் குடும்பத்தினரும் ஸௌக்யமாய் வாழ்க்கை நடத்தலாம். ஆனல் ஆசை அவரை விட வில்லை. ஏராளமாக லஞ்சம் வாங்க ஆரம்பிக் கிருர். லஞ்சம் வாங்குவது பாபம் என்றும் குற்றமென்றும் அகப்பட்டுக் கொண்டால் ராஜாங்கத்தில் கொடிய தண்டனை விதிப்பார் களென்றும் தெரியும். இருந்தும் ஆசையால் லஞ்சம் வாங்குவது நிற்கவில்லை. நாளுக்குநாள் அதிகமாகிக்கொண்டேவருகிறது. ஆனல் அவர் மனத்தில்மட்டும் நிம்மதி ஏற்படவில்லை. பாபத்துக்கு ஏதாவது பரிஹாரம் பண்ண வேண்டுமென்று சில ஸமயங்களில் தோன்று கிறது. தனக்கு லஞ்சமாகக்கிடைத்த தொகை யில் ரூபாய்க்கு ஒரு அணு வீதம் கணக்குப் பண்ணி அந்தத் தொகையை ஏழைகளுக்கு தானமாகக்கொடுக்கிருர். அவர் மனம் நிம்மதி யடைகிறது. லஞ்சம் வாங்கினல் அதில் ரூபாய்க்கு ஒரு அணு தர்மத்திற்கு செல வழித்துவிட்டால் தோஷம் தீர்ந்துவிடுமென்று அவருக்குத் தோன்றுகிறது. கூசாமல் லஞ்சம் வாங்குவது அவருக்கு பழக்கமாகிவிடுகிறது. அது தவறு என்றிருந்த எண்ணம் போய் அது ஒரு அவசியமான நியாயமான கார்யம் என்ற எண்ணமும் நிலைக்க ஆரம்பிக்கிறது.

இம்மாதிரி உதாஹரணங்கள் எவ்வளவோ சொல்லிக்கொண்டேபோகலாம். இப்படிப் பட்டவர்களின் ச்ரேயஸ்ஸில் (நன்மையில்) அக்கறையுள்ள பெரியோர்கள் இவர்கள் இப்படியிருப்பதைப் பார்த்து மிகவும் மனம் கலங்குவார்கள். 'இவர்களுக்குப் பரலோகத்தி லும் தெய்வத்தினிடத்திலும் நம்பிக்கையிருக் கிறது. அது ஒரு புண்யவிசேஷத்தின்பலமே. இருப்பினும் இன்னும் கொஞ்சம் விவேக புத்தியுடன் ஆய்ந்து பார்க்கிருர்களில்லையே! ஸர்வேச்வரனன்றே ஸகலர்க்கும் அவரவர் கர்மத்திற்குத் தகுந்தாற்போல் ஸுக துக்கங்களைக்கொடுக்கிறன். அவனுக்கு எது தர்மமென்று ஏற்றுக்கொள்ளத்தக்கதோ அதை யன்றே இவர்கள் செய்யவேணும். அப்போது தானே அவன் திருவுள்ளமுகக்கும். எதை அவன் அதர்மமென்று வெறுத்திருக்கிருனே அதை இவர்கள் மனத்தால்கூடநாடக்கூடாது. ஸர்வேச்வரன் அபிப்பிராயப்படி எது தர்மம் எது அதர்மம் என்பதை அவனல் நமக்குக் கைவிளக்காகக் கொடுக்கப்பட்டிருக்கும் சாஸ் த்ரங்களும் அவற்றைப் பின்பற்றி நடக்கும் பெரியோர்களின் ஆசாரங்களுந்தானேகாட்டிக் கொடுக்கவல்லவை. அவைகளை விட்டுவிட்டுத் தங்களுடைய சிறிய புத்தியைக்கொண்டு தங்க ளுக்கு ஒன்று தர்மமென்று தோன்றினல் அதை அநுஷ்டித்துக்கொண்டும் ஒன்று தர்ம மல்லவென்று தோன்றினல் அதை விட்டு விட்டும் இவர்கள் மனம்போனபடி செய்து விட்டு தங்களை க்ருதக்ருத்யராய் நினைத்துக் கொண்டு ஏமாந்துபோகிருர்களே! நாஸ்திகர் களைப்போல் பரலோகசிந்தையே இல்லாம லிருந்தால் இவர்களைப்பற்றி நாம் அங்கலாய்க்க வேண்டியதில்லை. நல்லவழியில் செல்ல ஆரம் பித்தும் நடுவில் வழிதவறி நடக்கிருர்களே! சாஸ்த்ரத்தையும் அதைப் பின்பற்றும் பெரியோர்களையும் நம்பி அவர்கள் சொல்படி நடக்கும்படி ஸர்வேச்வரன் இவர்களுக்கு நல்ல புத்தியைக்கொடுக்கமாட்டானு!' என்று ஏங்கி நிற்பர்கள். '𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌹𑍀𑌨𑍋𑌽𑌶𑍁𑌚𑌿𑌰𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍍 𑌅𑌨𑌰𑍍𑌹𑌃 𑌸𑌰𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌸𑍁' (ஸந்த்யாவந்தன மில்லாதவன் ஒருபோதும் சுத்தனன்று. அவன் ஒரு கார்யத்துக்கும் தகுந்தவனுகான்) என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதைச் செய்யாமல் தானதிகளைச் செய்வதாலும் தேவார்ச்சனை செய்வதாலும் பயனை எதிர் பார்க்கமுடியாது. லஞ்சத்தின்மூலமாகவோ மற்ற அதர்மமான வழிகளிலோ த்ரவ்யத்தை ஸம்பாதித்து அதில் கொஞ்சம் தானம் செய்து விட்டால் தோஷமில்லையென்று நினைப்பதும் தவறு. 'பசுமாட்டை அடித்து செருப்பு தானம் செய்தானும்' என்று ஒரு பழமொழி. அதைப்போலத்தான் இம்மாதிரிகார்யங்களும். அந்யாயமான வழிகளில் அதிக த்ரவ்யம் ஸம்பாதித்து அதில் ஒரு பகுதியைக்கொண்டு தானதிகளைச் செய்வதைவிட ந்யாயமான வழியில் ஸ்வல்பமாகஸம்பாதித்து அதிலிருந்து

ஸ்வல்பமான பணத்தைக்கொண்டு தானுதிகளைச் செய்வதுதான் சிறந்தது. இந்த உண்மை மனத்தில்படுவது அரிதாயிருக்கிறது. பட்டாலும் அது நிலைத்துநிற்பதில்லை. அநுஷ்டானத்துக்கும் வருவதில்லை.

தர்மஸூக்ஷ்மத்தை அறிவது மிகவும் கஷ்டம். சில ஸமயங்களில் இரண்டு தர்மங்களைச் சேர்ந்து செய்யமுடியாதபடி ஒன்றை விட்டு மற்றொன்றைச் செய்யவேண்டிய ஆவச்யகதை ஏற்படலாம். எதை விடுவது எதைச்செய்வது என்று ஆலோசித்து முடிவு செய்வது ச்ரமஸாத்யமாயிருக்கும். நம்முடைய புத்திக்கு ஒன்று முக்யமாகத்தோன்றும். சாஸ்த்ரம் வேறுவிதமாகச்சொல்லும். சாஸ்த்ரம் சொல்லுகிறபடி செய்யவேண்டுமேயொழிய நமக்குத் தோன்றுகிறபடி செய்யக்கூடாது.

நாம் சில பாபங்களைச் செய்துவிட்டால் அதற்கு சாஸ்த்ரங்களில் சொல்லியபடி பரிஹாரம் செய்தால்தான் தோஷம் நீங்கும். நம்முடைய சிற்றறிவுக்குத் தோன்றியபடி நாம் ஏதோ சில கார்யங்களைச்செய்துவிட்டால் மட்டும் அந்த தோஷம் தீராது. ஒவ்வொரு வியாதியும் அதற்குத்தகுந்த மருந்துகொடுத்தால்தான் தீரும். சாஸ்த்ரம் பாபமென்று தடுத்திருக்கும் ஒரு கார்யத்தை நாம் செய்துவிட்டால் அதற்கு பரிஹாரமாக சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்ட கார்யங்களைச் செய்தால்தான் அதன்கொடியபலனிலிருந்து தப்பலாம்.

எனவே தர்மாதர்மநிர்ணயத்தில் தான்தோன்றியாக (நாமாக) ஒரு நிர்ணயம் செய்துகொண்டு நடந்துவருவது போற்றத்தக்கதன்று.

ஸ்ரீ:

முண்டகோபநிஷத்து

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

இந்த அக்நியின் ஜ்வலிக்கும் நாக்குகளில் எந்த யஜமானன் காலம் தவறாமல் ஆஹுதிகளைக் கைக்கொண்டு அக்நிஹோத்ராதிகளைச் செய்கிறானோ, எல்லோருக்கும் மேல் இருப்பவனும், தேவதைகளின் நாயகனும், ஒப்பற்றவனுமான சதுர்முகன் எந்த ஸத்யலோகத்தில் வஸிக்கிறானோ அந்த லோகத்திற்கு அந்த யஜமானனை அந்த ஆஹுதிகள் ஸூர்யகிரணங்களாகி அழைத்துச் செல்லுகின்றன.

𑌏𑌹𑍍𑌯𑍇𑌹𑍀𑌤𑌿 𑌤𑌮𑌾𑌹𑍁𑌤𑌯𑌃 𑌸𑍁𑌵
𑌰𑍍𑌚𑌸𑌃 𑌸𑍂𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌰𑌶𑍍𑌮𑌿𑌭𑌿𑌰𑍍𑌯𑌜
𑌮𑌾𑌨𑌂 𑌵𑌹𑌨𑍍𑌤𑌿 । 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌂 𑌵𑌾𑌚𑌮𑌭𑌿
𑌵𑌦𑌨𑍍𑌤𑍍𑌯𑍋𑌽𑌰𑍍𑌚𑌯𑌨𑍍𑌤𑍍𑌯 𑌏𑌷 𑌵𑌃
𑌪𑍁𑌣𑍍𑌯𑌃 𑌸𑍁𑌕𑍃𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋
𑌕𑌃 ॥

[ஏஹ்யேஹீதி தாமாஹுதயஸ் ஸுவர்சஸ: ஸூர்யஸ்ய ரச்மிபிர்யஜமாநம் வஹந்தி । ப்ரியாம் வாசமபிவதந்த்யோऽர்சயந்த்ய ஏஷ வ: புண்யஸ்ஸுக்ருதோ ப்ரஹ்மலோக: ॥] (6)

ஸூர்யனின் ஒளியோடு சேர்ந்து ப்ரகாசிக்கிற ஆஹுதிகள் 'நற்கார்யங்களால் ஸம்பாதிக்கக்கூடிய புண்யமான இந்த ஸத்யலோகம் உங்களுக்கே' என்றபடி மதுரமொழிகளை மொழிந்து 'வருக! வருக!!' வென்று யஜமானர்களை வரவேற்று ஸத்யலோகம் அழைத்துச்செல்லுகின்றன.

𑌪𑍍𑌲𑌵𑌾 𑌹𑍍𑌯𑍇𑌤𑍇 𑌅𑌦𑍃𑌢𑌾 𑌯𑌜𑍍𑌞
𑌰𑍂𑌪𑌾 𑌅𑌷𑍍𑌟𑌾𑌦𑌶𑍋𑌕𑍍𑌤𑌮𑌵𑌰𑌂
𑌯𑍇𑌷𑍁 𑌕𑌰𑍍𑌮 । 𑌏𑌤𑌚𑍍𑌛𑍍𑌰𑍇𑌯𑍋 𑌯𑍇𑌽
𑌭𑌿𑌨𑌨𑍍𑌦𑌨𑍍𑌤𑌿 𑌮𑍂𑌢𑌾 𑌜𑌰𑌾𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌂
𑌤𑍇 𑌪𑍁𑌨𑌰𑍇𑌵𑌾𑌪𑌿 𑌯𑌨𑍍𑌤𑌿 ॥

[ப்லவா ஹ்யேதே அத்ருடா யஜ்ஞரூபா அஷ்டாதசோக்தமவரம் யேஷு கர்மா । ஏதச்ச்ரேயோயேऽபிநந்தந்தி மூடா ஜராம்ருத்யும் புநரேவாபியந்தி ॥]

பதினெட்டு கர்த்தாக்களைப் பற்றினதாய்ச் சொல்லப்பட்ட பல ஸங்கல்பத்துடன் கூடின ச்ரௌதகர்மாக்கள் எந்த யஜமானர்களிடமிருக்கின்றனவோ, அந்த யாகமயர்களாகிய யஜமானர்கள் ஓட்டைப்படகுபோல் ஸம்ஸாரஸாகரத்தை ஸரிவரக்கடக்க ஶக்தர்களல்லர். (ப்ரஹ்மா, அத்வர்யு, ஹோதா, உத்காதா என்ற ஒவ்வொரு ரித்விக்பிரிவிலும் நால்வர் நால்வராக மொத்த ரித்விக்குகள் பதினாறுபேர்கள். யஜமானன் பத்நீ இருவருடன் சேர்ந்து யாகம் நிர்வஹிக்கும் கர்த்தாக்கள் பதினெட்டுபேர்கள்.) எந்த மூடர்கள் பலகாமனையுடன் கூடின இந்த கர்மாக்களையே பெரிய ச்ரேயஸ் என நினைக்கின்றனரோ அவர்கள் மூப்பிறப்புப் பிறப்புகளை மாறிமாறிப் பெறுகின்றனர்.

𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑌾𑌮𑌨𑍍𑌤𑌰𑍇 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌾𑌃
𑌸𑍍𑌵𑌯𑌂 𑌧𑍀𑌰𑌾𑌃 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌂𑌮𑌨𑍍𑌯𑌮𑌾𑌨𑌾𑌃 ।
𑌜𑌙𑍍𑌘𑌨𑍍𑌯𑌮𑌾𑌨𑌾𑌃 𑌪𑌰𑌿𑌯𑌨𑍍𑌤𑌿 𑌮𑍂𑌢𑌾𑌃
𑌅𑌨𑍍𑌧𑍇𑌨𑍈𑌵 𑌨𑍀𑌯𑌮𑌾𑌨𑌾 𑌯𑌥𑌾𑌨𑍍𑌧𑌾𑌃

[அவித்யாயாமந்தரே வர்த்தமாநா: ஸ்வயம் தீரா: பண்டிதம் மந்யமாநா: । ஜங்கந்யமாநா: பரியந்தி மூடா: அந்தேநைவ நீயமாநா யதாந்தா: ॥] (8)

மிகவும் விவேகமற்றவர்களாயும் 'நாமே புத்திமான்களும் மேதாவிகளும்' என நினைக்கின்றவர்களாயும் (மூப்புப்பிணிகளாலே) பீடிக்கப்பட்டவர்களாயுமுள்ள அந்த யஜமானர்கள் குருடர்களால் வழிகாட்டப்பெற்ற குருடர்கள் போல் மேலும் கீழும் வந்து போய்க்கொண்டிருக்கின்றனர்.

𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌬𑌹𑍁𑌧𑌾 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌾𑌃 𑌵𑌯𑌂 𑌕𑍃𑌤𑌾𑌰𑍍𑌥𑌾 𑌇𑌤𑍍𑌯𑌭𑌿𑌮𑌨𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌬𑌾𑌲𑌾𑌃 । 𑌯𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌿𑌣𑍋 𑌨 𑌪𑍍𑌰𑌵𑍇𑌦𑌯𑌨𑍍𑌤𑌿 𑌰𑌾𑌗𑌾𑌤𑍍𑌤𑍇𑌨𑌾𑌤𑍁𑌰𑌾𑌃 𑌕𑍍𑌷𑍀𑌣𑌲𑍋𑌕𑌾𑌶𑍍𑌚𑍍𑌯𑌵𑌨𑍍𑌤𑍇 ॥

[அவித்யாயாம் பஹுதா வர்த்தமாநா: வயம் க்ருதார்த்தா இத்யபிமந்யந்தி பாலா: । யத்கர்மிணோ ந ப்ரவேதயந்தி ராகாத் தேநாதுரா: க்ஷீணலோகா: ச்யவந்தே ॥] (9)

ப்ருக்ருதிமண்டலத்தில் (தேவமநுஷ்யாதிகளாய்) பலவாறு வந்து பிறந்து விவேகமற்று 'நாமே க்ருதார்த்தர்கள்' என்று நினைத்துக்கொள்ளுகிறார்கள். எக்காரணத்தாலவர்கள் கேவலம் கர்மடர்களாய் ஸ்வர்க்காதிலோகங்களில் பேராசையினால் (தத்வஸ்திதியை) அறிவதில்லையோ, அக்காரணத்தினால் மிகவும் துக்கமுற்று புண்யங்கள் கழிந்தபிறகு அவர்கள் பூமியில் இழிகின்றனர்.

𑌇𑌷𑍍𑌟𑌾𑌪𑍂𑌰𑍍𑌤𑌂 𑌮𑌨𑍍𑌯𑌮𑌾𑌨𑌾 𑌵𑌰𑌿𑌷𑍍𑌠𑌂 𑌨𑌾𑌨𑍍𑌯𑌚𑍍𑌛𑍍𑌰𑍇𑌯𑍋 𑌵𑍇𑌦𑌯𑌨𑍍𑌤𑍇 𑌪𑍍𑌰𑌮𑍂𑌢𑌾𑌃 । 𑌨𑌾𑌕𑌸𑍍𑌯 𑌪𑍃𑌷𑍍𑌠𑍇 𑌤𑍇 𑌸𑍁𑌕𑍃𑌤𑍇𑌽𑌨𑍁𑌭𑍂𑌤𑍍𑌵𑍇𑌮𑌂 𑌲𑍋𑌕𑌂 𑌹𑍀𑌨𑌤𑌰𑌂 𑌵𑌾𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿 ॥

[இஷ்டாபூர்த்தம் மந்யமாநா வரிஷ்டம் நாந்யத் ச்ரேயோ வேதயந்தே ப்ரமூடா: । நாகஸ்ய ப்ருஷ்டே தே ஸுக்ருதேऽநுபூத்வா இமம் லோகம் ஹீநதரம் சாவிசந்தி ॥] (10)

இஷ்டம் என்கிற யாகாதிகளையும், பூர்த்தம் என்கிற தடாகநிர்மாணாதிகளையும் மிகவுமுயர்ந்தனவாய்க் கருதி வேறு பரமபுருஷார்த்தஸாதநம் கிடையாதென்றே மூடர்கள் நினைக்கின்றனர். புண்யபலமான ஸ்வர்க்காதிகளில் புண்யங்களை அநுபவித்து (செலவழித்து) இம்மண்ணுலகையும் இதைவிட ஹீநமான நரகாதிகளையும் அடைகிறார்கள்.

𑌤𑌪𑌃𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑍇 𑌯𑍇 𑌹𑍍𑌯𑍁𑌪𑌵𑌸𑌨𑍍𑌤𑍍𑌯𑌰𑌣𑍍𑌯𑍇 𑌶𑌾𑌨𑍍𑌤𑌾 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌂𑌸𑍋 𑌭𑍈𑌕𑍍𑌷𑌚𑌰𑍍𑌯𑌾𑌂 𑌚𑌰𑌨𑍍𑌤𑌃 । 𑌸𑍂𑌰𑍍𑌯𑌦𑍍𑌵𑌾𑌰𑍇𑌣 𑌤𑍇 𑌵𑌿𑌰𑌜𑌾𑌃 𑌪𑍍𑌰𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌯𑌤𑍍𑌰𑌾𑌮𑍃𑌤𑌃 𑌸 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌹𑍍𑌯𑌵𑍍𑌯𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 ॥

[தப: ச்ரத்தே யே ஹ்யுபவஸந்த்யரண்யே ஶாந்தா வித்வாம்ஸோ பைக்ஷசர்யாம் சரந்த: । ஸூர்யத்வாரேண தே விரஜா: ப்ரயாந்தி யத்ராம்ருதஸ்ஸ புருஷோ ஹ்யவ்யயாத்மா ॥] (11)

காட்டிலிருந்துகொண்டு ஶாந்தர்களாய் பிக்ஷை எடுத்துண்ணுமவர்களாயுள்ள எந்த வித்வான்கள் (ஸந்யாஸிகள்) தபஸ் என்கிற ப்ரஹ்மத்தை ச்ரத்தையுடன்கூட உபாஸிக்கின்றனரோ அவர்கள் பாபமற்றவர்களாய் ஸூர்யமண்டலத்தைப் பிளந்து எந்த லோகத்தில் ஹேயகுணசூந்யனாய் என்றுமோரியல்வினனாய் உள்ள பரமபுருஷன் வஸிக்கிறானோ அந்த லோகம் செல்லுகிறார்கள்.

𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌲𑍋𑌕𑌾𑌨𑍍 𑌕𑌰𑍍𑌮𑌚𑌿𑌤𑌾𑌨𑍍 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌦𑌮𑌾𑌯𑌾𑌨𑍍𑌨𑌾𑌸𑍍𑌤𑍍𑌯𑌕𑍃𑌤𑌃 𑌕𑍃𑌤𑍇𑌨 । 𑌤𑌦𑍍𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌰𑍍𑌥𑌂 𑌸 𑌗𑍁𑌰𑍁𑌮𑍇𑌵𑌾𑌭𑌿𑌗𑌚𑍍𑌛𑍇𑌤𑍍 𑌸𑌮𑌿𑌤𑍍𑌪𑌾𑌣𑌿𑌃 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌿𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑌿𑌷𑍍𑌠𑌮𑍍 ॥

[பரீக்ஷ்ய லோகாந் கர்மசிதாந் ப்ராஹ்மணோ நிர்வேதமாயாத் நாஸ்த்யக்ருத: க்ருதேந । தத்விஜ்ஞாநார்த்தம் ஸ குருமேவாபிகச்சேத் ஸமித்பாணி: ச்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம் ॥] (12)

கர்மங்களாலே ஸம்பாதிக்ககூடியஸ்வர்க்காதிலோகங்களை (மீமாம்ஸா ந்யாயங்களாலே) நன்றாய்ப் பரிசீலனம் செய்துபார்த்து எந்த ப்ரா

ஹ்மணன் 'நித்யனுகிய பரமபுருஷன் (கேவல) கர்மங்களால் அடையமுடியாதவன்' என்று நிர்வேதம் அடைகிருனே, அந்த ப்ராஹ்மணன் பரமபுருஷனை உள்ளபடி யறிய ஸமித்முதலிய உபஹாரஹஸ்தனுய் வேதாந்தச்ரவணம்பண்ணி பரப்ராஹ்மஸாக்ஷாத்காரம் பெற்ற ஆசார்யனை ஆச்ரயிக்கக்கடவன்.

தஸெ்ழ ஸ விஆநுுவஸஷாய
ஸஜுக் ஹுஶாஞவித்தாய ஶஜாநி
தாய | யெநாக்ஷரং வுஶஷং
வெஜ ஸதுং ஹொவாவ தாং
தகூதொ ஜுஹுவிஜுாமு ॥

[தஸ்மை ஸ வித்வா நுபஸந்நா
யஸம்யக் ப்ரசாந்தசித்தாயஸமா
ந்விதாய | யேநாக்ஷரம் புருஷம்
வேத ஸத்யம் ப்ரோவாச தாம்
தத்வதோ ப்ரஹ்மவித்யாம் ॥]

பாஹ்யேந்த்ரியஜயம் பெற்று, நன்ருய் ஸாந்தமான மனஸ்ஸை உடையவனுய் வந்து ஆச்ரயித்த அந்த சிஷ்யனுக்கு வித்வானுகிய அந்த ஆசார்யன் ஸ்வரூபகுணங்களில் மாறுதலற்ற பரமபுருஷனை எந்த வித்யையினுல் அறிவானே அந்த ப்ரஹ்மவித்யையை உள்ளபடி உபதேசிக்கவேண்டியது.

முதல் முண்டகம் இரண்டாவது கண்டம் முற்றிற்று.

தஷெதத்ஸதுং | யயா ஸுஜீஹாகு
வாவகாவிஷுலிஜா ஸஹஸுஶஃ
ஹுஹவனெ ஸஶவாஃ | தயாக்ஷ
ஶாவிவியாஸ்ஸொஜுாவாஃ ஹஜா
யனெ தகூ செவாவி யனி ॥

[ததேத்ஸத்யம் | யதா ஸுதீப்
தாத் பாவகாத் விஸ்புலிங்காஃ
ஸஹஸ்ரசஃ ப்ரபவந்தே ஸரூ
பாஃ | ததாக்ஷராத்விவிதாஸ்ஸோ
ம்யபாவாஃ ப்ரஜாயந்தே தத்ர
சைவாபி யந்தி ॥] (1)

பரப்ராஹ்மமே உத்பத்தி முதலிய மாறுதல்களற்றது. ஸோமரஸபாநம்செய்யப்பாங்கான சிஷ்யனே! பழுக்கக்காய்ந்து (பட்டரையில் தட்டப்படும்) நெருப்பிலிருந்து ஒன்றுபோலுள்ள பொறிகள் ஆயிரக்கணக்கில் எவ்விதம் உண்டாகின்றனவோ, அவ்விதமே ஸூக்ஷ்ம சிதசித்துக்களை தனக்கு சரீரமாக்கிக்கொண்ட அக்ஷரமென்னும் ப்ரஹ்மத்தினிடமிருந்து நாநாவிதஸ்தூலசிதசித்ரூப கார்யவர்க்கம் உண்டாகி அதிலேயே மறைகிறது.

ஜிவொஹுஜுதஃ வுஶஷஃ
ஸ வாஹுாஹுஜஶொ ஹுஜஃ |
அஹுாணொ ஹுஜநாஸ்ஹுொ
ஹுக்ஷராத் வரதஃ வஶஃ ॥

[திவ்யோ ஹ்யமூர்த்தஃ புருஷஃ
ஸபாஹ்யாப்யந்தரோ ஹ்யஜஃ |
அப்ராணோஹ்யமநாச்சுப்ரோ
ஹ்யக்ஷராத் பரதஃ பரஃ ॥] (2)

மேலுலகத்தில் வஸிப்பவன், உருவமற்றவன், ஸர்வாந்தர்யாமீ, ப்ராணன், மநஸ் இதுகளற்றவன், பரிசுத்தன், பிறப்பில்லாதவன் என்று பலவாருகப் புகழப்பட்டவன் எவனே அவன் ப்ரக்ருதிக்கும் மேலான ஜீவஸமஷ்டிக்குமப்பாற்பட்டவன்.

ஏதஷாஜாயதெ ஹுாணொ ஜந
ஸ்ஸெவுஜியாணி ச | வং வாயு
ஜெஜுாதிராவஃ வுயிவீ விஸ்வ
ஸு யாரிணீ ॥

[ஏதஸ்மாத் ஜாயதே ப்ராணோ
மநஸ்ஸர்வேந்த்ரியாணி ச | கம்
வாயுர்ஜ்யோதிராபஃப்ருதிவீ விச்
வஸ்ய தாரிணீ ॥] (3)

இந்த பரப்ராஹ்மத்தினிடமிருந்து ப்ராணன், மநஸ்ஸு, ஸர்வேந்த்ரியங்கள், ஆகாசம், வாயு, தேஜஸ், ஜலம், உலகத்தைத்தாங்கும் ப்ருதிவீ இவைகள் உண்டாகின்றன.

அமிஜுஜா வக்ஷுஷீ வஜுஸு
யுள ஶஸொஜுவாவிவுதா
ஜு வெஜாஃ | வாயுஃ ஹுாணொ

𑌹𑍃𑌦𑌯𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑌸𑍍𑌯 𑌪𑌦𑍍𑌭𑍍𑌯𑌾𑌂 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌹𑍍𑌯𑍇𑌷 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌾॥

[அக்நிர்மூர்த்தா சக்ஷுஷீ சந்த்ரஸூர்யௌ திசச்ச்ரோத்ரே வாக்விவ்ருதாச்ச வேதா: । வாயு: ப்ராணோ ஹ்ருதயம் விச்வமஸ்ய பத்ப்யாம் ப்ருதிவீ ஹ்யேஷ ஸர்வபூதாந்தராத்மா ॥] (4)

த்யுலோகமே அவனுக்குத்தலையெனத்தகும். பரிதி, மதி, நயநமுடைப்பரமனவன். திசை எங்கணும் செவியுடையன். அவன் சொல்லே ச்ருதி. வீசும் காற்றே ஈசனின் உயிர். உலகமெல்லாம் அவன் உள்ளம். அவனது இணையடியே இப்ருதிவீ. (இப்படி எப்பொருளும் அவனது அங்கோபாங்கங்களானதுபற்றி) அவனவைகளுக்கு அந்தர்யாமியானுன்.

𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌗𑍍𑌨𑌿𑌃 𑌸𑌮𑌿𑌧𑍋 𑌯𑌸𑍍𑌯 𑌸𑍂𑌰𑍍𑌯𑌃 𑌸𑍋𑌮𑌾𑌤𑍍𑌪𑌰𑍍𑌜𑌨𑍍𑌯 𑌓𑌷𑌧𑌯𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌮𑍍। 𑌪𑍁𑌮𑌾𑌨𑍍𑌰𑍇𑌤𑌃 𑌸𑌿𑌞𑍍𑌚𑌤𑌿 𑌯𑍋𑌷𑌿𑌤𑌾𑌯𑌾𑌂 𑌬𑌹𑍍𑌵𑍀𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌤𑍍𑌸𑌂𑌪𑍍𑌰𑌸𑍂𑌤𑌾𑌃॥

[தஸ்மாதக்நிஸ்ஸமிதோ யஸ்ய ஸூர்யஸ்ஸோமாத் பர்ஜ்ந்ய ஓஷதய: ப்ருதிவ்யாம் । புமாந் ரேதஸ்ஸிஞ்சதி யோஷிதாயாம் பஹ்வீ: ப்ரஜா: புருஷாத் ஸம்ப்ரஸூதா: ॥] (5)

அந்தப்ராஹ்மத்தினிடமிருந்து த்யுலோகமுண்டாகியது. அவ்வுலகத்திற்கு ஸூர்யனே தீவத்தி. (சாந்தோக்யமென்னும் உபநிஷத்தில் பஞ்சாக்நிவித்யையில் ஸூர்யனுல் த்யுலோகம் ப்ரகாசிப்பது பற்றி அந்த லோகத்தை தீனவும் அவனை தீவத்தி எனவும் ஓதியுள்ளது கொள்ளத்தக்கது.) (அந்த லோகத்தில் உண்டான) ஸோமனிடமிருந்து ஆழிமழைக்கண்ணனும் (பர்ஜந்யன். அதாவது—மழை பொழிதல் என்றபடி) (அவனிடமிருந்து) பூமியில் ஓஷதிகளும் உண்டாகின்றன. தன்னுல் உட்கொள்ளப்பட்ட ஓஷதிகளை உபாதாநகாரணமாய்க்கொண்டு புருஷன் பெண்ணிடம் ரேதஸ்(சுக்லம்)ஸை உதிர்க்கிறுன். இம்மாதிரி (முன்கூறிய பஞ்சாக்நிவித்யையில் சொல்லியுள்ள க்ரமத்தையொட்டி பாம்பரையாக) பலவிதமான ப்ராஹ்மணுதி ப்ரஜைகள் பரமபுருஷனிடமிருந்து உண்டானவைகளே.

𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍃𑌚𑌃 𑌸𑌾𑌮 𑌯𑌜𑍂𑌂𑌷𑌿 𑌦𑍀𑌕𑍍𑌷𑌾 𑌯𑌜𑍍𑌞𑌾𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌕𑍍𑌰𑌤𑌵𑍋 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌶𑍍𑌚। 𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑌶𑍍𑌚 𑌯𑌜𑌮𑌾𑌨𑌶𑍍𑌚 𑌲𑍋𑌕𑌾𑌃 𑌸𑍋𑌮𑍋 𑌯𑌤𑍍𑌰 𑌪𑌵𑌤𑍇 𑌯𑌤𑍍𑌰 𑌸𑍂𑌰𑍍𑌯𑌃॥

[தஸ்மாத்ருசஸ்ஸாம யஜூம்ஷி தீக்ஷா யஜ்ஞாச்ச ஸர்வே க்ரத தக்ஷிணச்ச । ஸம்வத்ஸரம் ச யஜமாநச்ச லோகா: ஸோமோ யத்ர பவதே யத்ர ஸூர்ய: ॥] (6)

அந்த அக்ஷரபுருஷனிடமிருந்து ருக்யஜுஸ் ஸாமவேதங்கள், தீக்ஷைகள், (கர்த்தா மேற்கொள்ளும் நியமங்கள்) அக்நிஹோத்ரம் முதலிய யஜ்ஞங்கள், க்ரதுக்கள், (ஸோமரஸஸம்பந்தமுள்ளவை) தக்ஷிணை, ஸம்வத்ஸரம் முதலிய காலங்கள், யஜமானன், சந்த்ரஸூர்யர்களால் துலங்கும் உலகங்கள் எல்லாம் உண்டாகின்றன.

𑌤𑌸𑍍𑌮𑌾𑌚𑍍𑌚 𑌦𑍇𑌵𑌾 𑌬𑌹𑍁𑌧𑌾 𑌸𑌂𑌪𑍍𑌰𑌸𑍂𑌤𑌾𑌃 𑌸𑌾𑌧𑍍𑌯𑌾 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌃 𑌪𑌶𑌵𑍋 𑌵𑌯𑌾𑌂𑌸𑌿। 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌪𑌾𑌨𑍌 𑌵𑍍𑌰𑍀𑌹𑌿𑌯𑌵𑍌 𑌤𑌪𑌶𑍍𑌚 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌂 𑌵𑌿𑌧𑌿𑌶𑍍𑌚॥

[தஸ்மாச்ச தேவா பஹுதா ஸம்ப்ரஸூதா: ஸாத்யா மநுஷ்யா:பசவோ வயாம்ஸி । ப்ராணுபாநௌ வ்ரீஹியவௌ தபச்ச ச்ரத்தா ஸத்யம் ப்ரஹ்மசர்யம் விதிச்ச ॥] (7)

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம: ॥

ஸ்ரீ அஹோபிலமடத்தில் அச்சிடப்பெற்ற கீழ்க்கண்ட புஸ்தகங்கள்

விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன

		ரூ. அ. பை.
1.	அதிகரண ஸாராவளி [தேவநாகரலிபி சிந்தாமணி வ்யாக்யாநத்துடன் கூடியது]	... 6—8—0
	ஷி காலிகோ பயிண்ட் செய்தது.	... 7—8—0
2.	உக்திநிஷ்டாபரணம் ந்யாஸநிஷ்டாமீமாம்ஸாச (க்ரந்தலிபி)	... 1—0—0
3.	ந்யாஸ நிர்ணயம் ,,	... 0-12—0
4.	வீக்ஷாரண்ய க்ஷேத்ர மாஹாத்ம்யம் (மணிப்ரவாளவ்யாக்யாநம்) ,,	... 1—8—0
5.	ஸ்ரீவீரராகவ ஸ்வாமி ஸுப்ரபாதம் ,,	... 0—4—0
6.	ஆஹ்நிகம் ,,	... 1—0—0
7.	ஸந்த்யாவந்தந பாஷ்யம் (மணிப்ரவாளவ்யாக்யாநம்) [நாகரலிபி]	... 0-12—0
8.	சாற்றுமுறை புஸ்தகம்	... 0-12—0
9.	தனியன் புஸ்தகம்	... 0—4—0
10.	காமாஸிகாஷ்டகம் & வேகாஸேதுஸ்தோத்ரம் (தமிழ் வ்யாக்யாநத்துடன்)	... 0—6—0

(தபால் செலவு வேறு)

கிடைக்குமிடம்

ஸ்ரீகார்யம், ஸ்ரீ அஹோபிலமடம், திருவள்ளூர்.

Regd. No. M. 4437.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

நந்தன ஸூ ஐப்பசிமீ -1952ஸூ அக்டோபர்-நவம்பர்-மீ

[தக்ஷிணாயநம் - சரத் ருது - துலா மீ]

17—10—52	1வ.	வெள்ளிக்கிழமை	...	துலாக்ருஷ்ணசதுர்தசி திதி; தீபாவளிப்பண்டிகை. (இன்று ஸங்க்ரமண தர்ப்பணம்.)
18—10—52	2வ	சனிக்கிழமை	...	● ஸர்வ அமாவாஸ்யை.
25—10—52	9வ	சனிக்கிழமை	...	பூராடம்; ஸேனைமுதலியார் திருநக்ஷத்ரம்
26—10—52	10வ	ஞாயிற்றுக்கிழமை	...	திருவோணம்; பொய்கையாழ்வார் திருநக்ஷத்ரம்.
27—10—52	11வ	திங்கட்கிழமை	...	அவிட்டம்; பூதத்தாழ்வார் திருநக்ஷத்ரம்.
28—10—52	12வ	செவ்வாய்க்கிழமை	...	தசமி - ஏகாதசி திதித்வயம்; சதயம்; பேயாழ்வார் திருநக்ஷத்ரம்.
29—10—52	13வ	புதன்கிழமை	...	த்வாதசி திதி; ஸர்வ உத்தான ஏகாதசி.
11—11—52	26வ	செவ்வாய்க்கிழமை	...	தசமி திதி.
12—11—52	27வ	புதன்கிழமை	...	அதிதி.
13—11—52	28வ	வியாழக்கிழமை	...	ஏகாதசிதிதி; ஸர்வ ஏகாதசி.
15—11—52	30வ	சனிக்கிழமை	...	துலா க்ருஷ்ன த்ரயோதசி திதி; வ்ருச்சிக ரவி 46-8. (மறுநாள் ஸங்க்ரமண தர்ப்பணம்.)

Printed by J. Rangachariar, Srikaryam Sri Ahobilamutt, at Sri Malola press, 30. Panagal Street, Tiruvellore. Edited & Published by P. S. Srinivasa Desikachariar. 2. Audiappa mudali Street, Vepery, Madras 7.